Registered No. M-4483

Madras War Review { TAMIL 26-11-1943

யுத்த சஞ்சிகை

மலர் IV 1943-ம் ௵ நவம்பர் ௴ 26௳, வெள்ளிக்கிழமை இதழ் 13

புதுப் போராட்ட ஆரம்பம்



கர்னல் நாக்ஸ்.

முன்னைய விட நேர்முகமாக ஜப்பானைத் தாக்குவதற்கு மத்திய பசிபிக் மகா சமுத்திரத்தி லுள்ள கில்பெர்ட் தீவுகள் மீது நாம் போர் தொடுப்பது புதிய போராட்டத்தின் ஆரம்பமாகும்.

இந்தப் போராட்டத்திற்கு இரண்டு நோக்கங்க ளுண்டு. முதலாவதாக, முன்பு நம் பாதுகாப்பிற் குட்பட்டிருந்த தீவுகளிலிருந்து ஜப்பானியர்களை விரட்டவேண்டும். இரண்டாவதாக, அமெரிக்காவி லிருந்து தென் கிழக்குப் பசிபிக் தீவுகளுக்கு சப்ளைகள் வரும் வழி நூற்றுக் கணக்கான மைல்கள் குறைக்கப்பட வேண்டும்.

இப்படிப்பட்ட போராட்டத்தை நாம் மேற்கொண்டிருப்பதி லிருந்தே, நமது அபரிமிதமான கடற் படை பலமும் விமான பலமும் தெளிவாகத் தெரிகிறது. ஜப்பானியர்களுடைய கவனத்தை வேறு வழியில் திருப்புவதற்காக, மார்ஷல் தீவுகளை நம்முடைய கடற்படை தாக்கிற்று. ஜப்பானிய விமானங் கள் கில்பர்ட் தீவுகளில் தலைகாட்டா திருக்க வேண்டு மென்பது தான், இதனுடைய நோக்கம். அதனால், எதிரி விமானங்கள் கில்பர்ட் தீவுகளில் தென்படவில்லை. எதிரிக் கப்பல்களும் காணப்படவில்லை. ஜப்பானியக் கப்பற்படை, பலத்துடன் ட்ரக் என்னுமிடத்தில் மட்டுந் தான் இருக்கக் கூடு மென்று எனக்குத் தெரியும்.

—கர்னல் நாக்ஸ், அமெரிக்க யுத்த மந்திரி, பத்திரிகை பிரதிநிதிகளிடம் நவம்பர் மாதம் 23-ம் தேதி கூறினார்.

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
முகப்புப் படம் : கர்னல் நாக்ஸ்	1	ஹிட்லருடைய வேடிக்கையான பிரசங்கம் ..	6
புதுப் போராட்ட ஆரம்பம்	1	ஜோஸியம் சொல்லலாமா ?	7
முர சொலி	2	போருக்குப் பின் பெண்கள் நிலை	9
விளம்பரம் : "விடுதலை"	2	யுத்த காலத்தில் அரசாங்க உதவி	10
தலையங்கம் : மீட்சியும் புனருத்தாரணமும் ..	3	யுத்த நாட் குறிப்புகள்	11
போர்முனை நிகழ்ச்சி விளக்கம்	4	விளம்பரம் : பரிசுகள்	12

மு ர சொ லி

"சமீபத்தில் ஐரோப்பிய யுத்தம் இத்தனுந் தேதி தான் முடி வடைந்து விடு மென்று நிர்ண யிக்கவே கூடாது."

—ஹலிபாக்ஸ் பிரபு, வாஷிங்டனிலிருந்து
நவம்பர் மாதம் 21-ம் தேதி ஒலி பரப்பியது.

* * * * * *

"எதிரி நீர் மூழ்கிக் கப்பல்கள் இன்னும் நடமாடிக் கொண்டுதா னிருக்கின்றன. என்றாலும், இப்போதுள்ள போக்கு எதிரிக்கு விரோதமாகத் தான் இருக்கிறது."

—மிஸ்டர் ஆர்டிமஸ் கேட்ஸ், அமெரிக்கக் கப்பற் படை மந்திரி
பிரிட்டனுக்கு வந்து சேர்ந்த போது, நவம்பர் மாதம் 19-ம் தேதி குறிப்பிட்டது.

* * * * * *

"நாம் திட்ட மிட்டதை விட வேகமாக பசிபிக் மகா சமுத்திரத்தில் சம்பவங்கள் நடை பெறு கின்றன. தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் விஷயங்கள் திருப்திகரமாகவே நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன."

—கர்னல் நாக்ஸ், அமெரிக்கக் கப்பற்படை மந்திரி,
பத்திரிகைப் பிரதிநிதிகளிடம் நவம்பர் 22-ம் தேதி கூறியது.

* * * * * *

"யுத்தத்திற்குப் பிறகும், பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுக ளெல்லாம் ஒற்றுமை யோடிருப்பதற்கு மூன்று வழிகளுண்டு, (1) ஒரே அந்நிய நாட்டுக் கொள்கை, (2) ஒன்றிற் கொன்று தொடர் புடைய பாதுகாப்புத் திட்டம், (3) அரசாங்கங்களுக்குள் பரஸ்பர நல்லுறவு அமைவ தோடு, அந் நாட்டு மக்களுக்குள்ளாகவும் பரஸ்பர நல்லுறவு அமைய வேண்டும்."

—வைகௌண்ட் க்ரான்போர்ன், பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு மந்திரி,
லண்டனில் நவம்பர் மாதம் 23-ம் தேதி கூறியது.

தமிழ்ப் பெருமக்களே !

"விடுதலை"

உங்களுடைய பத்திரிகையே !!

ஏனென்றால், இது சரியான முறையில் உள்ள பத்திரிகையாகும்.
ராய்ட்டர், அசோசியேட் பிரஸ் தந்திச் செய்திகளை வாசகர்களுக்கு இப் பத்திரிகை அப்படியே தருகிறது.
குறிப்பாகத் தமிழ் நாட்டின் நன்மைக்கு வேண்டிய அகில இந்தியச் செய்திகளை யெல்லாம் வெளியிடுகிறது.
இது எந்த ஒரு குறிப்பிட்ட பகுதியாருடைய கருத்தை மட்டும் வெளியிடும் பத்திரிகை யல்ல.
நமது கீழ்த் திசையில் யுத்த மேகம் பரவிக் கொண்டிருக்கிறது.
இந்தியாவின் நலன்களும் உங்களுடைய தனிப்பட்ட நலன்களும் பாதிக்கப்படலாம்.
எனவே, அன்றாட நிகழ்ச்சிகளை அப்போதைக்கப்போது உங்கள் நன்மையை நாடி அறிவித்துக் கொண்டிருக்கும் தொண்டை, "விடுதலை"ப் பத்திரிகை செய்துவரும்.

"விடுதலை" படியுங்கள்.

வருடச் சந்தா : (தபால் மூலம்) ரூ. 24-0-0. சென்னைக்கு ரூ. 20-0-0.
மாத சந்தா : ,, ரூ. 2-2-0. சென்னைக்கு ரூ. 1-12-0.
தபாற் பெட்டி நெம்பர் 325.

மானேஜர்,
"விடுதலை"
சிந்தாதரிப்பேட்டை, சென்னை.

Registered No. M-4483.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV 1943-ம௵ நவம்பர்மீ 26உ, வெள்ளிக்கிழமை இதழ் 13

மீட்சியும் புனருத்தாரணமும்

நேச நாடுகளின் மீட்சிப் புனருத்தாரண நிர்வாகத்தின் நடவடிக்கைகளின் போக்கு, இன்னவையென்று வகுத்த கமிட்டியின் முடிவான அறிக்கையில் காணப்படும் சில ஏற்பாடுகளை, அட்லாண்டிக் நகரத்திலிருந்து வெளிவரும் ஒரு பத்திரிகையின் செவ்வாய்க்கிழமை இதழில் வெளியிட்டிருக்கிறது. அச்சு நாடுகளிலும் கூட இந்த நிர்வாகம் வேலை செய்யத் தயாராயிருப்பதாகவும், ஆனால் அதன் பொருட்டு அந்தந்த நாடுகளிலிருந்து தொகை வசூலிக்கப்படுமென்றும் ஒப்புக் கொண்டிருக்கிறது. எதிரி நாடுகளிலுள்ள உபரி உணவுப் பொருள்களைக் கைப்பற்ற, இந்த நிர்வாகம் தயாராயிருக்கிறது. அந்த அறிக்கையில் இந்த நிர்வாகம் எந்தெந்தப் பகுதிகளில் வேலை செய்யவேண்டுமென்றும், அது எந்த அளவிற்கு சப்ளைகள் அனுப்பக் கூடுமென்றும், இந்த நிர்வாகத்திற்கும் இராணுவத் தலைவர்களுக்கும் எப்படிப்பட்ட சம்பந்தம் இருக்க வேண்டுமென்றும், வரையறுக்கப்பட்டிருக்கிறது. இது பற்றி விளக்கிக் கூறிய டைரக்டர் ஹெர்பெர்ட் லெமான், எதிரி நாடுகளில் எவ்வளவு உபரி உணவுப் பொருள்கள் இருக்கின்றனவென்னும் தகவலை இந்த நிர்வாகம் கண்டுபிடித்து, மீட்கப்பட்ட நாடுகளின் புனருத்தாரணத்திற்குத் தேவையானவற்றை, அங்கிருந்து கொண்டு வருமென்றும் சொன்னார். இப்படி உதவி பெறும் நாட்டு அரசாங்கங்களின் உரிமைகளை, இந்த நிர்வாகம் பாதிக்காது.

“யுத்தத்தினால் பட்டினி கிடக்கும் மக்களுக்கு உணவளித்து பழைய நிலைமையில் அவர்கள் வாழும்படி செய்வதுதான் இந்த ஸ்தாபனத்தின் நோக்கம். மிஸ்டர் ரூஸ்வெல்ட் நவம்பர் மாதம் 9-ம் தேதி அட்லாண்டிக் நகரத்திற்கு விஜயம் செய்த பிரதிநிதிகளை வரவேற்று செய்த சொற்பொழிவில், இம்மகா நாட்டின் பயனாகத் தான் அந்த ஸ்தாபனம் அமைந்ததென்று தெரிவித்தார். வெளி நாடுகளுக்கு விதை தானியங்கள், அறுவடை செய்வதற்கான வ்யவசாயக் கருவிகள், பால் பண்ணைகள் அமைப்பதற்கான பசுக்கள், ஆகியவற்றை மட்டும் தான் இந்த நிர்வாகம் அனுப்பும். ஒவ்வொரு நாட்டையும் அதன் பழைய பொருளாதார நிலைமைக்குக் கொண்டு வர முயற்சிப்பது இந்த நிர்வாகத்தின் எல்லைக் குட்பட்டதல்ல. அந்தந்த நாடுகளே அவ்வேலைகளைச் செய்து கொள்ள வேண்டும்.

இந்த நிர்வாகத்தின் பரந்த மீட்சித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, எந்த முறையில் தொகைகள் செலவிடப் படவேண்டுமென்பது பற்றி, நவம்பர் மாதம் 22-ம் தேதி திங்கட்கிழமை திட்டம் வகுக்கப்பட்டது. ஆகவே, இந்த நிர்வாகத்தின் நிலைமை தெளிவாகத் தெரிகிறது. தகுந்த அந்நிய நாட்டு நாணய மாற்று மூலமாக, இந்த நிர்வாகத்தின் செலவுகளைக் கொடுக்கக் கூடிய நிலைமையிலுள்ள அரசாங்கங்கள் உள்ள நாடுகளுக்காக, தற்போது இருப்புள்ள நிதியைச் செலவிட்டு, அதைக் குறைத்துவிடக் கூடாது என்பதுதான், இந்த நிர்வாகத்தின் கொள்கை. அதாவது, அந்தந்த நாடுகள் அதனதன் சக்திக்கு ஏற்றவாறு பொறுப் பேற்றுக் கொள்ள வேண்டும். மீட்சி வேலை சம்பந்தப்பட்ட வரையிலும், உணவு, எரிபொருட்கள், துணி, தங்குமிடம், மருந்துகள் முதலியவற்றை ‘சப்ளை’ செய்வது, இந்த ஸ்தாபனத்தின் வேலை. புனருத்தாரண வேலை சம்பந்தப்பட்ட வரையில், எதிரி கைப்பற்றியதனால் குலைந்துபோன பொது ஜனவசதிகளையும் போக்குவரவு சாதனங்களையும் திருத்தி யமைப்பது சம்பந்தமாகவும், இந்த நிர்வாகம் தன்னாலானவை எல்லாம் செய்யும். மீட்சி, புனருத்தாரணம் என்னும் இரண்டு அம்சங்களில், மீட்சி பரந்த முறையிலும், புனருத்தாரணம் குறுகிய பொருளிலும் தான் கையாளப்படுமென்று மிஸ்டர் ரூஸ்வெல்ட் கூறினார்.

இந்த ஒப்பந்தத்தில் 44 நாடுகளின் பிரதிநிதிகள் நவம்பர் மாதம் 9-ம் தேதி வாஷிங்டன் நகரத்தில் கையொப்பமிட்டார்கள். பொது நன்மையை முன்னிட்டு, தம் நாடுகளெல்லாம் எவ்வளவு பொறுப்பேற்றுக் கொள்ளுகின்றனவென்று நன்கு தெரிந்து கொண்டு தான் கையொப்பமிட்டனர். கையொப்பமிட்டபோது மிஸ்டர் ரூஸ்வெல்ட் செய்ததோர் வானொலிப் பிரசங்கத்தில், கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார் :—“எல்லா நேச நாடுகளும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதனால், அவற்றிற்குள் ஏற்பட்டிருக்கும் ஒற்றுமை, மேலும் வலுவடைகிறது இதனால் நமக்கு ஊக்கம் அதிகரிக்கிறது.” மறுநாள் நடைபெற்ற மகா நாட்டு நடவடிக்கைகளைக் குறித்து அவர் பேசும்போது, “தேவைகளிலிருந்து விடுபடவேண்டி, நடைமுறைக் கொத்த, சாத்தியமான முறைகளை முதலாவதாகக் கையாள, இது பெரிதும் உதவும்” என்று குறிப்பிட்டார்.

மாஸ்கோ ஒப்பந்தம் நடைமுறைக்கு ஏற்றதா என்று சந்தேகித்தவர்களும் உண்டு. அந்தச் சந்தேகங்களை இந்த மகா நாட்டின் நடவடிக்கைகள் கண்டிப்பாகப் போக்கி யிருக்கும்.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்.

தூரக் கிழக்கு நாடுகளில் போர் நிலைமை : சோவியத் கருத்து.

நவம்பர் 12-ம் தேதி வெளிவந்த சஞ்சிகையில், ரஷ்யப் புரட்சியின் 26-வது ஆண்டு விழாவை முன்னிட்டு டோக்கியோவில், நடைபெற்ற விருந்தைப் பற்றியும், அந்த விருந்தில், ஜப்பானிய அன்னிய நாட்டு மந்திரியும், நிதி மந்திரியும் கலந்து கொண்டது பற்றியும் குறிப்பிட்டு, ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் முன்பிருந்த சம்பந்தத்தைப் பற்றி சரித்திர ஆதாரங்களுடன் விவாதித்து, தற்போது இந்த இரு நாடுகளும் கொண்டுள்ள நட்பு, அச்சத்தினாலும், வசதியினாலும் ஏற்பட்டது என்று குறிப்பிட்டோம். வாயால் நட்புப் பேசி, உள்ளத்தில் வெறுப்பை வளர்க்கும் இந்த விசித்திரமான தன்மையை இந்த இரு நாடுகளிலுள்ள பத்திரிகைகளும் வானொலிப் பிரசங்கங்களும் வெளிப்படுத்துகின்றன. சென்ற திங்கட்கிழமை (நவம்பர் 22-ம் தேதி) மாஸ்கோவிலிருந்து ஒரு செய்தி வெளியானது. அதன் சுருக்கம் "**வார் அன் தி ஒர்க்கிங் கிலாஸ்**" என்ற பத்திரிகையில் வெளி வந்திருக்கிறது. 83-வது ஜப்பானியப் பார்லிமெண்டின் விசேஷக் கூட்டத்தினால் ஏற்பட்ட பலா பலன்களைக் குறித்து அதில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. பசிபிக் மகா சமுத்திரத்திலுள்ள இராணுவ நிலைமையைக் குறித்து விவாதிக்கும் போது, அமெரிக்கப் படைகள் முன்னேறித் தாக்கக் கூடிய நிலைமையிலிருப்பதால், ஜப்பானின் நிலைமை, சாதகமாயில்லை யென்று அப் பத்திரிகை கூறுகிறது. மேலும் அந்த சோவியத் பத்திரிகாசிரியர் கூறுவதாவது :—

"தேர்ந்த படையினருக்கும் மூலப் பொருட்களுக்கும் ஜப்பானில் பஞ்சமாகி விட்டது."

பிறகு சமீபத்தில் டோஜோவும் மிஸ்டர் ஷிகெமிட்சுவும் செய்த பிரசங்கங்களைக் குறிப்பிட்டு அவர் எழுதியதாவது :—

"ஆசியாவின் கீழ் பகுதிகளை யெல்லாம் எல்லையில்லாமல் கட்டியாள வேண்டு மென்று ஏன் ஜப்பானியர்கள் ஆசை கொண்டலைகிறார்கள் என்பதற்குக் காரணத்தைக் கண்டு பிடிக்க, வெகு தூரம் ஆலோசிக்க வேண்டியதே கிடையாது. ஆனால் இழுத்த இழுப்பிற்கு வருந் தன்மையிலேயோ, கற்பனைத் திறமையிலேயோ ஜப்பானிய ஏகாதிபத்திய வாதிகள் குறைவுபட்டவர்கள் என்று அவர்கள் மீது பழி சொல்ல முடியாது. ஜப்பானிய அரசியல் வாதிகள் விரைவில் தம்மைத் திருத்தியமைத்துக் கொண்டு புதிய முறைகளைக் கையாள ஆரம்பித்துக் கொண்டிருக்கிறார்கள். விஷய ஞானமுள்ள கட்சித் தலைவர்கள் தம் மிருக பலத்தை அடிப்படையாகக் கொண்ட கொள்கையைச் சாமர்த்தியமாக மறைத்து விடுகிறார்கள்."

அன்றியும், கிழக்காசியா சம்பந்தமாக, அவர்கள் கோணல் மாணலான புதிய முறையைக் கைக் கொண்டிருக்கிறார்களென்றும், இதனால் ஜப்பானிய சாம்ராஜ்யத்திற்கு அரசியலிலும் இராணுவத் துறையிலும் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமையைத் தான் இது தெரிவிக்கிறதென்றும் குறிப்பிடுகிறார். மேலும் அவர் கூறுவதாவது :—

"யுத்தம் தமக்குச் சாதகமாக முடியுமென்று அவர்கள் உறுதியாக எண்ணுவதற்கே இடமில்லை. அதனால் தாம், தமக்குள்ள அரசியல், இராணுவ, பொருளாதார ஆதிபத்தியங்களை நிலை நாட்டிக் கொள்ள, ஜப்பானிய அரசியல் வாதிகள் புதிய வழிகளைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது.

ஜப்பானியப் படைகளின் பலவீனம் : ரஷ்ய நிருபர் ஆராய்ச்சி.

சோவியத் பத்திரிகைகளில் இது போன்ற ஜப்பானியர்களுக்கு விரோதமான கருத்துக்கள் சில சமயங்களில் வெளிவந்தன. "பசிபிக் மகா சமுத்திரத்தில் போராட்டம்" என்னும் தலைப்புள்ள கட்டுரைகள் பலவற்றை "க்ரஸ்னயா ஸ்வெஸ்டா" என்னும் பத்திரிகையின் இராணுவ நிருபரான கர்னல் எம். டெல்கெனொ் எழுதி வெளியிட்டார். அவற்றில், ஜப்பானுக்குச் சாதகமான முறையில் பல நுட்பங்களை வெளியிட்டார். ஆனால், சிங்கப்பூரை ஜப்பானியர்கள் கைப்பற்றிய போது, அது பற்றி வெகுவாகப் புகழ்வதை விடுத்து, அமெரிக்கக் கப்பற் படை பலமடைந்து வருவதுபற்றி வற்புறுத்திக் கூறினார். பசிபிக் மகா சமுத்திரப் போரின் முதற் கட்டம் 1942-ம் வருஷம் முடிவான வுடனே, டெல்கினொ் சொன்னார்: "இப்போது ஜப்பான் செய்துள்ளதை விட மிகப் பெரும் முயற்சிகள் செய்தால் தான் இந்தியாவிலோ, ஆஸ்திரேலியாவிலோ போராட்டத்தை ஆரம்பிக்கலாம். ஜப்பானியர்கள் இது வரை அடைந்துள்ள வெற்றிகளெல்லாம் முடிவான வெற்றிகளல்ல. இவை, மேலான விமான பலத்தால் தான் ஏற்பட்டன. ஆனால், நிலைமை வெகுவாக மாறிவிட்டது. நியூ கினி, நியூ பிரிட்டன் ஆகிய இடங்களில் நடைபெற்ற யுத்தங்களிலிருந்து நேச நாட்டினரின் விமான பலம் எவ்வளவு ஓங்கிவிட்ட தென்று தெரிகிறது. அன்றியும், போர்முனைகளுக்கும் ஜப்பானுக்கும், ஜப்பானிய தளங்களுக்கும் வெகுதூரம்; ஆகவே, நெடுந் தூரங்களுக்குப் போக்கு வரவு சாதனங்கள் அமைக்க வேண்டியிருக்கிறது. ஜப்பானியக் கப்பற் படை வெகுவாக பலவீனப் பட்டுவிட்டது. இதனால் ஜப்பானியர்களின் தாக்கும் சக்தி பெரிதும் பாதக மடைந்திருக்கிறது".

ரஷ்ய-ஜப்பான் ஒப்பந்த ஆண்டு விழா : ரஷ்யாவில் அலட்சியம்.

ரஷ்ய-ஜப்பான் சம்பந்தத்தைப் பற்றியும், பொதுவாக ஜப்பானைக் குறித்தும் சோவியத் பத்திரிகைகள் சாதாரணமாக மிகுந்த எச்சரிக்கையோடு தான் எழுதுகின்றன. சோவியத் அரசாங்கத்திற்கும் ஜப்பானுக்கும் 1942-ம் வருஷம் மகா தகுடுதத்தமாக நடந்து கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. தூரக் கிழக்கு நாடுகளில் போர் எதுவும் மூளாதபடி தடுக்க வேண்டியது மிகவும் அவசியமாயிருந்தது. ஏனென்றால், அப்போது தான் ஜெர்மன் படைகள் வால்காவையும் காக்கசஸையும் நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தன. ஆகவே, ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் உள்ள அடிப்படையான சம்பந்தத்தைக் குறித்து ஏதேனும் குறிப்பிட வேண்டியிருந்தால், உத்தியோக தோரணையில் ஜப்பானிய அதிகாரிகள் செய்யும் பிரசங்கங்களி லிருந்து மேற் கோள்கள் மட்டுந்தான் சோவியத் பத்திரிகைகளிலும் வானொலிப் பிரசங்கங்களிலும் கூறப்பட்டனவே யொழிய, அவற்றின் சாதக பாதகங்கள் விவாதிக்கப்பட வில்லை. 1941-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் முடிவான ரஷ்ய-ஜப்பான் ஒப்பந்தத்தின் 2-வது ஆண்டு விழாப் பற்றி, சோவியத் யூனியனில் ஒருவரும் அக்கறை கொள்ளவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

மஞ்சூரியாவில் ஜப்பானியப் படைகளின் போக்கு வரவுகளைப் பற்றிய வதந்திகளை சோவியத் பத்திரிகைகள் அலட்சியப் படுத்துவதே ஒரு விதியெனக் கொண்டிருந்தன. அன்றியும் குத்தகைக் கடன் திட்டப்படி அமெரிக்காவிலிருந்து சோவியத் யூனியனுக்கு, பசிபிக் மகா சமுத்திரத்திலுள்ள ஜப்பானிய ஆதிக்கத்திற்குட்பட்ட கடல் வழியாக 'சப்ளை'கள் வருவதையும் அவை அலட்சியப் படுத்தின என்றாலும், சந்தர்ப்பம் நேருகிற போது, சோவியத் அரசாங்கத்தின் போக்கு உறுதியாகவும், சமரசமாகவும் இருக்கவில்லை என்றும் கூறிவிட முடியாது. எட்டு மாதங்களுக்கு முன்பு வ்லாடிவாஸ்டாக்கி லிருந்து கம்சட்காவுக்கு கீழ் சீனக் கடல் வழியாகப் போய்க் கொண்டிருந்த "கோலா" என்னும் சோவியத் கப்பல் எப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் மூழ்கியது என்பது பற்றி, ஜப்பானிய அறிக்கைகள் விளக்கமாகக் கூறுகின்றன. "அஷாய்," "நிப்பன் டைம்ஸ்" என்னும் ஜப்பானியப் பத்திரிகைகளின் பிரதிநிதிகள் இந்தக் கப்பலி லிருந்து தப்பிய சோவியத் மக்களைத் தனித் தனியே பேட்டி கண்டதாகவும், தம் கப்பலை அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலொன்று தாக்கி மூழ்கடித்த தென்று அவர்கள் கூறியதாகவும், அந்தப் பத்திரிகைகள் பிரசுரித்தன. ஆனால் "டாஸ் ஏஜென்ஸி" என்னும் பத்திரிகை ஸ்தாபனம் இது ஒரு பொய்யான செய்தி என்று எடுத்துக் காட்டி, 1943-ம் வருஷம் மார்ச்சு மாதம் 22-ம் தேதி, தூரக் கிழக்குக் கப்பல் போக்குவரவு நிர்வாக ஸ்தாபனத்தார் வசமுள்ள தகவல்களை ஆதாரமாய்க் கொண்டு, மறுத்தது. சோவியத் மாலுமிகள் கூறியதாக ஜப்பான் பத்திரிகைகளில் வெளிவந்த அறிக்கை, பொய்யானது.

ஜப்பானியர் மனப்போக்கு

ஜப்பானியப் பத்திரிகைகளின் போக்கும் வானொலிப் பிரசாரத்தின் போக்கும் ஏறக்குறைய ஒன்று போலவே யிருக்கின்றன. நடுநிலைமை ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு தான் ரஷ்ய ஜப்பான் ஒப்பந்தம் அமைந்திருக்கிறது என்ற முறையில் தான், விளக்கிக் கூறப்படுகின்றன. உதாரணமாக டோக்கியோ வானொலி நிலையத்திலிருந்து 1943-ம் வருஷம் மே மாதம் 5-ம் தேதி

(5-ம் பக்கம் பார்க்க.)



சென்ற அக்டோபர் 13-ம் தேதி, இத்தாலி ஜெர்மனி மீது போர் தொடுத்திருப்பதாக மார்ஷல் படோக்ளியோ பத்திரிகைப் பிரதிநிதிகளிடம் அறிவிக்கும் காட்சி.

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

ஜெர்மன் மொழியில் செய்ததோர் பிரசங்கத்தில், ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் போர் மூட்டத் தக்க முறையில் சூங்கிங்கில் செய்திகள் பரப்பப்பட்டன வென்றும், ரஷ்ய ஜப்பான் உறவு, நடுநிலைமை ஒப்பந்தத்தை யொட்டி அமைந்த தாகையினால், எவ்வளவு தூரம் மனதுடைந்த நிலைமையில் சூங்கிங் அரசாங்கம் இருக்கிற தென்று தெளிவாக விளங்குகிற தென்றும் தெரிவித்தார்.

அமெரிக்காவி லிருந்து தூரக் கிழக்கு நாடுகளிலுள்ள துறைமுகங்களுக்குத் தளவாடங்களைக் கொண்டு வரும் கப்பல்களைக் குறுக்கிடாதபடி ஜப்பான் மிகுந்த எச்சரிக்கையோடிருந்தது. குத்தகைக் கடன் திட்டப்படி ரஷ்யாவிற்குப் போய்ச் சேர்ந்த தளவாடங்களில் மூன்றில் ஒரு பங்கு, பசிபிக் மகா சமுத்திரத்தின் வழியாக வ்லாடிவாஸ்டாக் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தன. 1943-ம் வருஷம் மார்ச்சு மாதம் அமெரிக்க அரசாங்க சபையினருக்குச் சமர்ப்பிக்கப்பட்டதோர் கால் வருஷக் குத்தகைக் கடன் சம்பந்தமான அறிக்கையுடன் இணைக்கப்பட்டிருந்த ஒரு படத்திலிருந்து, இந்த உண்மை வெளி வருகிறது.

அற்புதத் தோழர்களின் ஆயுதச் சமரசம்

ஜப்பானிய வானொலி நிலைய ஒலி பரப்புக்கள் மனத் தடுமாற்றத்தோடும் எச்சரிக்கையோடும் செய்யப்படுவதாகத் தெரிகிறது. அவ்வப்போது ரஷ்ய ஜப்பானிய உறவைப்பற்றியும் அதில் குறிப்பிடுகிறார்கள். உதாரணமாக, க்வாங்குன் படையின் சார்பாகப் பேசிய மேஜர் ஜெனரல் யஹகா, சென்ற எப்ரல் மாதத்தில், வானொலி நிலையத்தில் ஒலி பரப்பியதோர் பிரசங்கத்தில் கூறியதாவது :—

"மஞ்சூரியா எல்லைப்புரம் நெடுக, நிலைமை அமைதியா யிருக்கிறது. சட்ட விரோதமாக சோவியத் படைகள் எல்லைப்புறத்தைக் கடந்து வருவது வெகுவாகக் குறைந்து விட்டது. என்றாலும், எதற்கும் ஜப்பானியப் படைகள் ஆயத்தமாகத் தான் இருக்கின்றன."

ஜப்பானியப் பத்திரிகைகள் அவ்வப்போது கொப்பல்ஸ் விஷமம் செய்வதைப் போலவே, ரஷ்யாவுக்கும் நேச நாடுகளுக்கும் விரோதத்தை யுண்டாக்கத் தக்க முறையில் முயற்சிக்கின்றன. சில சமயங்களில் ரஷ்யா மட்டும் தனித்திருந்து போராடுவதாகவும், அமெரிக்காவும் பிரிட்டனும் ரஷ்யாவைக் கைவிட்டு விட்டதாகவும் குறிப்பிடுகின்றன. ரஷ்யாவிற்காக மற்ற சிறிய ஐரோப்பிய நாடுகளையெல்லாம் காப்பாற்றாமல் நேச நாடுகள் கைவிட்டுவிட்டன வென்று கூறுகின்றன. இப்படி எழுதுவது ஏதோ ஒரு சமயத்தில் தான். அதுவும் மிகவும் எச்சரிக்கையோடு தான் எழுதுகின்றன.

விசித்திரமான தோழர்களா யிருக்கும் ரஷ்யாவும் ஜப்பானும், தற்போதுள்ள நிலைமையில், தமக்குள்ள வேற்றுமை யுணர்ச்சிகளைக் கொண்டு வெளிப்படையாகப் பகைமை பாராட்டிக் கொள்ள முடியாத நிலைமையி லிருக்கின்றனர். இந்த ஆயுதச் சமரசம் இருசாராருக்கும் வசதியாகவும் சாதகமாகவு மிருக்கின்றது.

ஹிட்லருடைய வேடிக்கையான பிரசங்கம்.

கோப்பெல்சின் புதிய கணக்கும் பழைய பேச்சும்.

டோக்கியோ மகாநாடும், ஜப்பானின் மூலப் பொருள் கொள்ளையும்.

"அச்சுப் பிரசாரம்" என்ற தொடரில் சென்ற வாரம், நவம்பர் மாதம் 17-ம் தேதி, சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில் "மெட்ராஸ் வார் ரிவியூ" ஆசிரியர் டி. ஏ. வி. நாதன் அவர்கள் ஒலிபரப்பிய பிரசங்கம் பின்வருமாறு :—

ஹிட்லர் பிரசித்தி பெற்ற பீர்க் கடை ஹாலிலிருந்து ஒரு பிரசங்கம் செய்தார். அது அருமையான பிரசங்கம்; நகைச் சுவை மிகுந்த பிரசங்கம்! கஷ்டங்கள் மிகுந்த காலத்தில் நகைப்பது சில சமயத்தில் இயல்பு தான். தயிர்க் குடம் உடைந்து போனபோது நகைத்த பெண்ணின் கதை நினைவிற்கு வருகிறது. எவ்வளவு கஷ்டங்களில் அகப்பட்டுக் கொண்டாள் அந்தப் பெண்! கடைசியாக தெருக்களில் தயிர் விற்று அவள் வாழ்க்கையை நடத்தி வந்தாள். ஒரு நாள் அவளுடைய கால் இடறி, தயிர்க் குடம் கீழே விழுந்து உடைந்து விட்டது. இந்த விஷயத்தை ஒரு வேடிக்கையாகக் கொண்டு, அவள் சிரித்தாளாம்! "ஏன் சிரிக்கிறாய்?" என்று அங்கு கூட்டம் கூடியவர்கள் கேட்டார்கள். அவள் தன்னுடைய வாழ்க்கையின் கஷ்டங்களை ஆதியோ டந்தமாகக் கூறினாள். "அதற்கழுவேனா, இதற்கழுவேனா?"—என்று பிரலாபித்து விட்டு, "இனிமேல் அழ முடியாததால் சிரித்தேன்!" என்று சொன்னாளாம்.

அம்மாதிரியான நிலைமையில் இருக்கிறார் ஹிட்லர். அவர் எதை நினைத்து வியாகூலப் படுவார்? ரஷ்யாவில் அலங் கோலமாக ஓடிக் கொண்டிருக்கும் தமது அருமையான சிப்பாய்களை நினைத்து துக்கிப்பாரா? இட்டலியில் முன் வைத்த காலைப் பின் வைத்து, பின் வைத்த காலை அதற்கு பின் தள்ளி வைத்துச் சென்று கொண்டிருக்கும் தம்முடைய துருப்புகளின் நிலையைக் கண்டு ஏங்குவாரா? அல்லது அட்லாண்டிக் கடலில் மிகுந்த அட்டகாசம் செய்து கொண்டிருந்த ஜெர்மன் சப்மரீன் கப்பல்களின் முது கெலும்பு முறிக்கப் பட்டதைக் கண்டு பெருமூச் செறிவாரா? இவை எல்லாவற்றையும் விட, தம்முடைய உயிருக்குயிரான ஜெர்மனியின் மேல், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக, நேச தேச விமானங்கள் குண்டுமாரி பெய்வதைக் கண்டு, தம்முடைய கண் மாரி பெய்யும் படியாக வருந்துவாரா? எதற்காக அவர் வருந்துவார்? ஆகையால் தான் சிரித்தார் போலும் என்று நினைக்கலாம். ஆனால் உண்மையில் அவர் சிரிக்க வில்லை. அவருடைய பிரசங்கம் தான் சிரிப் பூட்டுவதா யிருந்தது.

நகைச் சுவை மிகுந்த பிரசங்கம் என்றால், பிரசங்கம் செய்வோர் நகைக்க வேண்டிய தில்லை; கேட்பவர்கள் நகைத்தால் போதும். கேட்பவர்கள் நகைக்க வேண்டும், அல்லது நகைக்கக் கூடும், என்ற எண்ணம் பிரசங்கியாருக்கு இல்லாமல் இருக்கலாம். அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. பிரசங்கத்தால் உண்டான பலன் தான் நமக்கு முக்கியம். அழுது கொண்டே செய்யும் பிரசங்கத்தினால் சிரிப்பு உண்டானால், அதை நகைச் சுவைப் பிரசங்கம் என்று தான் கொள்ள வேண்டும். அல்லது அடிப்பட்டு வீழும் தருவாயில், வீரம் பேசி அட்டகாசம் செய்யும் பிரசங்கமாயிருக்கலாம். அது நகைப்பை உண்டாக்குமானால், அதையும் நகைச் சுவை பிரசங்கமாகத் தான் கொள்ள வேண்டும்.

12-மணிக்குப் பின் தான்!

இப்படிப்பட்ட பிரசங்கம் தான் நவம்பர் மாதம் 9-ம் தேதி ஹிட்லரால் செய்யப்பட்டது.

"காலம் ஜெர்மனியின் பக்கத்தில் இருக்கிறது இந்தத் தடவை. பன்னிரண்டு மணி அடிப்பதற்கு 15 நிமிஷங்களுக்கு முன், ஜெர்மனி தன்னுடைய ஆயுதங்களை கீழே போடப் போவதில்லை: 12 அடித்து ஐந்து நிமிஷத்துக்குப் பிறகு தான் அப்படிச் செய்யும்,"

என்று வீராவேசத்துடன் ஹிட்லர் பேசினார். உலகத்தையே ஒரு குடைக் கீழ் ஆள வேண்டு மென்ற பேராவல் கொண்ட ஹிட்லர், இப்பொழுது ஆயுதங்களையே கீழே போடுவதற்கு மணிக் கணக்கு பார்க்க ஆரம்பித்திருக்கிறார்! என்ன வேடிக்கை பாருங்கள்! ஜோசியத்தில் ஹிட்லருக்கு முழு நம்பிக்கை. நாளும், கிழமையும், மணிக் கணக்கும் பார்த்த பிறகு தான் இந்த யுத்தத்தை ஆரம்பித்தார். அதே மாதிரியாக யுத்த முடிவில் ஆயுதங்களை கீழே போடுவதற்கும் மணிக் கணக்கு பார்க்க வேண்டாமா? இது ஒரு விதத்தில் நியாயந் தான்.

இதை ஆதரித்து, டாக்டர் கோப்பல்ஸ் நவம்பர் மாதம் 16-ம் தேதி, பர்லினில் பேசி யிருக்கிறார்.

"நமது தலைவர் கூறியபடி, 12 மணி அடித்த பிறகு தான் நம்முடைய ஆயுதங்களைக் கீழே போட வேண்டும்,"

என்று அவரும் மணிக் கணக்கை வற்புறுத்தி யிருக்கிறார். இப்படிக் கூட ஹிட்லரின் பிரசார மந்திரி கூறி யிருப்பாரா என்று நீங்கள் நினைக்கலாம். பத்திரிகைகளில் இதன் விவரம் வெளி வந்திருக்கிறது. டாக்டர் கோப்பல்ஸ் இரண்டு மணி நேரம் செய்த பிரசங்கத்தின் முடிவில், இம்மாதிரிக் கூறியதாக 'ஜெர்மன் நியூஸ் ஏஜென்சி' அறிவித்திருக்கிறது.

இந்த மணிக் கணக்கில் ஒரு வேடிக்கை யிருக்கிறது. யுத்த காலக் கணக்கு ஒரு மணி நேரம் முன்னல்லவா தள்ளப் பட்டிருக்கிறது? ஆகையால் ஹிட்லர் 12-மணி அடித்து 5-நிமிஷத்துக்குப் பிறகு ஆயுதங்களை கீழே போட்டால், 11-மணி அடித்து 5-நிமிஷத்தின் போது சரணாகதி யடைந்ததாகத் தான் கருதப்படும்.

ரஷ்ய யுத்தமும், ஜெர்மானியர் ஓட்டமும்.

12-மணி என்றால் பூரண வெற்றி என்ற பொருளில் ஹிட்லர் கூறியிருக்கிறார். ஆனால் யார் வெற்றி யடையப் போகிறார்கள் என்பது தான் கேள்வி. இதற்கு உண்மையான பதிலுக்கு ஆதாரம் ஹிட்லருடைய பிரசங்கத்திலேயே இருக்கிறது.

"இந்தச் சமயத்தில் யுத்தத்தின் மிகக் கடுமையான போர், கிழக்கே (ரஷ்யாவில்) நடக்கிறது. கடைசியாக நடக்கும் போர் தான் முடிவானது. அந்தப் போரில் சரியான மணிக் கணக்கை உபயோகிக்கத் தெரிந்த தேசம் தான் வெற்றி பெறும்,"

என்று ஹிட்லர் கூறுகிறார். சரியான மணிக் கணக்கை பின் வாங்கி ஓடுவதற்கு ஹிட்லருடைய சிப்பாய்கள் உபயோகப் படுத்திக் கொண்டு போகிறார்களே ஒழிய, தங்களுக்கு வெற்றி மணி யடிப்பதற்கு உபயோகிப்பதாகத் தெரிய வில்லை. தங்களுடைய ஓட்டத்துக்குப் பலவிதமான காரணங்கள் கூறினார்கள். "ரஷ்யர்களுக்குப் பயந்து நாங்கள் ஓடவில்லை; நாங்களே சொந்தமாக, எங்களுடைய இஷ்டப்படி, ஓடுகிறோம்"—என்று பர்லின் வானொலி நிலையப் பிரசாரகர்கள் கூறினார்கள். "போர் முனை குறுக்கப் படுகிறது" என்றார்கள் ராணுவப் பேச்சாளர்கள். "அசைந்து கொண்டே யிருக்கும் பாதுகாப்பின்" பெருமையைப் பற்றி அளந்தார்கள் அச்சு நிலையத்தார். இப்போது உண்மையான காரணத்தைப் பர்லின் ஒப்புக் கொண்டது. நவம்பர் மாதம் 1-ம் தேதி, ஹீன்ஸ் மேகர்லின் என்ற ஜெர்மன் யுத்த நிருபர் பர்லின் ஒலி பரப்பில் உள்ளதைச் சொல்லி விட்டார். அவர் கூறுகிறார் :

"ஒரு ஜெர்மன் பான்சர் படை ஒரு எதிர்த் தாக்குதலை ஆரம்பிக்கிறது. தன்னை விட மூன்று மடங்கு அதிக டாங்கி பலமுள்ள ரஷ்யப் படையின் மேல் அது மோதிக் கொள்ளும்படியாக நேருகிறது. மிகப் பிரமாண்டமான எண்ணிக்கையுள்ள சிப்பாய்களும் யுத்த தளவாடங்களும் நம்மை எதிர்த்துப் போராடுகின்றன. தினந்தோறும், நமது சிப்பாய்கள் அதிக பலமுள்ள எதிரியின் மேல் தாக்குதலை நடத்த வேண்டியவர்களா யிருக்கிறார்கள்—இதை அவர்கள் வெறுக்கிறார்கள்."

சரி, வெறுக்காமல் வேறென்ன தான் செய்ய முடியும்? மற்றொரு பர்லின் பேச்சில் வெறுப்போடு ஆச்சரியமும் காட்டப் பட்டிருக்கிறது. ஒரு ஜெர்மன் பேச்சாளர் கூறுகிறார் :

ரஷ்யாவின் பலம்

"ஒரு தலையை நறுக்கினால் பல தலைகள் முளைப்பது போன்ற ஆயிரந் தலைகளுள்ள ஒரு பெரும் ராட்சத சிருஷ்டி யோடு நாம் போராடுவது போலத் தோன்றுகிறது. எப்படி இந்தத் தலைகள் முளைக்கின்றன என்று கேட்பதில் யாதொரு பிரயோசனமு மில்லை. ஏனென்றால் எங்கள் முன்னால் நடக்கும் ஆச்சரியங்களைப் பற்றி, தர்க்க பூர்வமாக ஆராய்ச்சி செய்வதற்கு எங்களுக்கு அவகாசம் கூடக் கிடையாது!

இவ்வளவு வெறுப்போடு கூடிய ஆச்சரியத்துடன் ஏன் ஜெர்மானியர்கள் போராட வேண்டும்? ஹிட்லர் தம்முடைய பிரசங்கத்தில் பதிலளித்திருக்கிறார்.

"1939-ம் வருஷத்திலிருந்து ஐரோப்பாவை போல்ஷிவிசம் என்ற பொது வுடைமைக் கொள்கையிலிருந்து காப்பாற்றுவதற்காக, ஜெர்மனி போராடிக் கொண்டு வருகிறது. கிழக்கிலிருந்து வரும் அபாயம் 2,000 வருஷங்களாக ஐரோப்பாவை பயப்படுத்திக் கொண்டு வந்தது. அது போல்ஷிவிசமாக இப்போது உரு வெடுத்து நிற்கிறது. அது ஐரோப்பாவில் பிரவேசிக்காமல் இருப்பதற்கு காரணம், ஜெர்மனி ஒரு பெரும் பாதுகாப்புச் சுவரை போல நின்றிருப்பது தான்."

போராடும் லட்சியம்

ஹிட்லர் இப்போது கூறுவது எவ்வளவு தூரம் உண்மை என்பதை அவருடைய பிரசார மந்திரியே முன்னமேயே வெளிப்படுத்தி விட்டார். ரஷ்யாவோடு செய்யப்பட்ட நேச உடன்படிக்கையை நிராகரித்து, ரஷ்யாவின்

(8-ம் பக்கம் பார்க்க)

ஜோஸியம் சொல்லலாமா?

‘மக்கள் பிறக்கிறதும், மழை பெய்கிறதும் எப்போது என்று முன் கூட்டியே சொல்ல மகா தேவனாலும் முடியாது’ என்றொரு பழமொழி உண்டு. இப்பொழுது அந்தப் பழமொழியோடு, ‘இந்த மகா யுத்தம் முடிகிறதும் எப்போது என்று முன் கூட்டியே சொல்ல மகாதேவனாலும் முடியாது’ என்று சேர்த்துக் கொள்ளலாம் போலிருக்கிறது.

“1943 லேயே யுத்தம் முடிந்துவிடும்” என்று யாரோ முன்பு சொன்னார்களே ஐயா, இன்னும் யுத்தம் நடக்குதே ஐயா?” என்று ஒருவர் கேட்கிறார். ‘அப்பொழுது இருந்த நிலைமையைப் பார்த்தால், யுத்தம் அப்படியே முடிந்துவிடும் என்று தான் சொல்லத் தோன்றிற்று. ஆனால், அதற்கப்புறம் எத்தனையோ விஷயங்கள் நடந்திருக்கின்றன. காலப் போக்கிலே பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதனால் யுத்தம் 1944-லிலேயும் நன்றாக நடக்கும் என்று தான் சொல்லத் தோன்றுகிறது’ எனும் பதிலைத் தான் மேற் கண்ட நபருக்குச் சொல்ல முடியும்.

‘1944-ம் வருஷத்திலேயாவது இந்த யுத்தம் முடிந்து போய்விடுமா’ என்று அவர் உடனே ஆவலோடு கேட்கக் கூடும்.

அவருக்கும், அவர்போல் கோடிக் கணக்கான மக்களுக்கும், யுத்தம் சீக்கிரம் முடிந்து போகக் கூடாதா என்ற எண்ணம் இருக்கலாம். ஆகவே அவர்கள் யாரைப் பார்த்தாலும், மேற் கண்ட விதமே, கேள்விகள் கேட்டுக் கொண்டிருப்பார்கள், அவர்களுக்கெல்லாம் திட்டமான பதிலை யாரால் தான் அளிக்க முடியும்? ஒருவராலும் முடியாது. யுத்த முடிவைப் பற்றி யாருமே திட்டமாக ஜோஸ்யம் சொல்ல முடியாது, ஜோஸ்யம் சொல்ல முயற்சிப்பதும் தவறு.

‘1944-ம் வருஷத்திலே யுத்தம் முடிந்தாலும் முடியும். அவ்வாறு முடியாவிட்டால், மேற்கொண்டு நடந்தாலும் நடக்கும். சமாதானமோ, ஒரு கட்சியின் சரணாகதியோ, ஏற்பட்டுவிட்டால், யுத்தம் நின்றுவிடும்’ என்று ஒரு தினுஸாக, பட்டும் படாமலும் சொல்லலாமே ஒழிய, நிச்சயமாக என்ன ஆகும் என்று யார் கண்டார்கள்?

ஆனால், யுத்தத்தை நடத்துவதில் முக்கியமான பொறுப்பு எடுத்துக் கொண்டிருக்கும் அநேகரில் சிலர், அவ்வப்பொழுது உலகத்தாருக்குச் சில உண்மைகளை வெளியிடுகிறார்கள். அவற்றைக் கவனித்தால், அவ்வப் போதுள்ள யுத்த நிலைமை வெளியாகும்.

அடுத்தபடி என்ன செய்ய வேண்டும்?

‘1944-ம் வருஷத்திலே, எப்படியாவது ஒரு முடிவு கட்டிவிட நேச தேசத்தார்கள் தீர்மானித்திருக்கிறார்கள்’ என்கிறார் ஒருவர். இதைப் பற்றி சந்தேகப் படவே வேண்டாம். யுத்தப் போக்கு நேச தேசத்தார்க்கு எங்குமே சாதகமாகத் தானே இருக்கிறது. அதோடு, நேச தேசத்தார்களில் அதி முக்யமான மூவல்லரசுகள் வேறே மாஸ்கோவில் கூடிப் பேசியாகி விட்டது. அடுத்தபடி என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றித் தான் அவர்கள் அதிகம் பேசி யிருப்பார்களே ஒழிய, ஏற்கெனவே தமது நாட்டு வீரர்கள் சாதித்தவற்றைக் குறித்து, சும்மா பேசிப் பேசி நேரத்தைக் கழித்திருக்க மாட்டார்கள் என்பது நிச்சயம்.

அவர்கள் பேசி முடிவு கட்டியது என்னென்ன என்று வெகு விவரமாகத் தெரியாவிட்டாலும், இப்பொழுது ஐரோப்பாவில் நடக்கும் காரியங்களைக் கவனித்தால், அவர்கள் பேசியது என்ன என்பது சிறுகச் சிறுகத் தெரிகிறது. ஜெர்மனியை இனி எந்நாளும் தலை தூக்க வொட்டாமல் அடித்துவிடுவது என்று எல்லோரும் தீர்மானித் திருப்பதாகவே தெரிகிறது.

‘பாம்புக் குட்டி, பார்க்க அழகாக இருக்கிறது; அது நன்றாக வளைந்து வளைந்து விளையாடுகிறது’ என்று விட்டுவைத்தால், அது பெரிய நாகமாக வளர்ந்து, பிரமாண்டமான படத்தை விரித்தாடி, பயங்கரமாக மூச்சு விட்டு, விஷத்தைக் கக்கி, ஆட்களைக் கடித்து, ஊரையே அலங்கோலப் படுத்துகிற நிலைமையை அடைந்து விடுமல்லவா? அந்த நிலைமையில் ஒரு நீண்ட தடி கொண்டு அதன் மண்டையிலடித்து, அதை நசுக்கிக் கொல்ல வேண்டியது தானே நியாயம்?

இனியும் சும்மா இருக்கலாமா?

அதே போல, ஜெர்மனி, சென்ற மகா யுத்தத்திற்குப் பிறகு, இருபது வருஷங்களாக என்னென்னமோ விளையாட்டுகளை யெல்லாம் உலகோருக்கு ஆடிக் காட்டிக் கொண்டிருந்தது. இப்பொழுது அதே ஜெர்மனி, இத்தனை வருஷமாகக் கடும் விஷத்தையே சேகரித்து வந்திருக்கிறது; இப்பொழுது அந்த விஷத்தைக் கக்குகிறது; அதனால் உலக சமாதானமே குலைந்து போய் விட்டது என்பது தெளிவாகிவிட்டது. இனியும் சும்மா இருக்கலாமா? யாராவது ஒருவரோ, எல்லோருமோ சேர்ந்து இந்த விஷ ஜந்துவை நசுக்கிக் கொல்ல வேண்டும். இல்லாவிட்டால், யாருமே நிம்மதியாகத் தூங்க முடியாது. இதைத் தெரிந்து தான், பிரிட்டனும் போரி லிறங்கியது. இவ்வாறு, தான் போரில் இறங்குவதால், தன்னைச் சேர்ந்த பிரமாண்டமான சாம்ராஜ்யமும் போரில் இறங்கக் கூடும்; அதனால் கஷ்ட நஷ்டங்கள் பல நேரிடலாம் என்பது பிரிட்டனுக்கும் தெரியும். ஆனாலும் கொடிய விஷப் பாம்பு ஒன்று எதிர்க் கரையிலே, அட்டகாசம் செய்கிறது என்று நிச்சயமாகத் தெரிந்த பின்னும், சும்மா யிருப்பது பிரிட்டனுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, அது சட்டென்று போரி லிறங்கி விட்டது. அது தான் பிரிட்டன் மீது ஹிட்லருக்கு மகா கோபம்.

அந்தக் கோபத்தை அவர் சீமையில் உள்ள லண்டன், சவுதாம்டன் போன்ற நகர்கள் மீது 1941-ல் பிரமாதமாகக் காட்டினார். அதன் பலனாக மேற் கண்ட நகரங்கள் ரொம்பவும் கஷ்டப்பட்டன என்பது வாஸ்தவம். அப்பொழுது ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்கள் சீமையில் உள்ளோரின் மனோ திடத்தை இன்னும் நன்றாகக் கெட்டிப்படுத்தியது என்பதும் வாஸ்தவம்.

அப்பொழுது ஹிட்லர் செய்த காரியத்தின் பலனை இப்பொழுது ஜெர்மானியர் அனுபவிக்கிறார்கள்.

ஜெர்மானியர்கள் தூங்கி வருஷக் கணக்காகி விட்டன

ஜெர்மனியில் உள்ள நகரங்களில் ஏதேனும் ஒரு சில, ஒவ்வொரு நாளும், சீமையிலிருந்து புறப்பட்டுச் செல்லும் நேச தேச விமானிகளின் குண்டு வீச்சுகளுக்கு இலக்காகி வருகின்றன. ஜெர்மன் மக்கள் சரியாகத் தூங்கி, வருஷக் கணக்கில் ஆகிவிட்டன.

ரொம்ப நாளைக்கு முந்தி பார்ப்பானேன்? நாலு நாட்களுக்கு முன்னாலே, பெர்லின் மீதும், ஒட்விக்ஷேபன் என்ற நகர் மீதும், கிட்டத்தட்ட ஆயிரம் விமானங்கள் வட்டமிட்டிருக்கின்றன. அன்று செலவு 2,500 டன் வெடி குண்டுகள். பெட்ரோல் கணக்கைப் பார்க்க வேண்டாம். அது வேறே கணக்கு! இவ்வளவு பெட்ரோல் செலவிற்கு, இவ்வளவு ஜெர்மானியருக்கு நஷ்டம் ஏற்பட்டது என்பது வேறே கணக்குத் தானே?

ஜெர்மனியை இருபது வருஷ காலமாக யுத்தத்திற்கு தயார் செய்திருந்தார் ஹிட்லர். சிறு குழந்தைகள் உள்ளங்களிலே யுத்த வெறியை ‘இஞ்செக்ட்’ செய்யத் தொடங்கினார். அந்தச் சிறு குழந்தைகள் இருபது வருடங்களுக்குப் பிறகு, யுத்த வெறி கொண்ட சோல்ஜர்களாகி விட்டனர். தாம் செய்வது சரியா, தப்பா என்று ஆராயவே அவர்களுக்குத் தெரியாது. குருட்டுத் தனமாக ஹிட்லர் சொல்வதே தெய்வ வாக்கு என்று நம்புகிறவர்களாக வளர்ந்து விட்டார்கள் அவர்கள்.

அதனால் தான், யுத்த நிபுணர்கள் சொல்லுகிறார்கள், ஜெர்மனியின் ராணுவம் முறியு முன், ஜெர்மன் பொது ஜனங்களின் மனோ திடம் குலைவு பெறும் என்று. ராணுவத்தில் உள்ளோருக்கு சாவைப் பற்றி அக்கரையில்லை. ஆனால், உள் நாட்டில் குழந்தை குட்டி, விவசாயம், வியாபாரம், வேலை, வெட்டி, வீடு, வாசல் என்றிருப்பவர்களுக்குத் தான், அவை நஷ்டமானால் கஷ்டமாக இருக்கும். ராணுவத்திலிருப்பவர்கள் ‘பசி, பசி’ என்று துடிக்கவே மாட்டார்கள். என்ன யுத்தமானாலும், வேளா வேளைக்குச் சாப்பாடு கிடைத்துக் கொண்டிருக்கும் அவர்களுக்கு. இலை போட்டு, ஆர அமர்ந்து சாப்பிடா விட்டாலும், அவர்கள் சாப்பிடாமலே இருந்து விடமாட்டார்கள். ஓடவும், சாடவும், துப்பாக்கி ஏந்திச் சுடவும், பீரங்கிகளை இயக்கவும் வயிறு காய்ந்து கொண்டிருந்தால் முடியுமா? அவர்களது வயிறு காய்ந்தால் வேலை ஒன்றும் நடக்காது. யுத்தமே நின்று விடும். அதனால் தான், யுத்த களத்திலே, நமது எதிரிகள் தங்களது போக்கு வரத்து மார்க்கங்களைப் பத்திரமாகப் பாதுகாக்க முயலுகிறார்கள். அவற்றைச் சீர் குலைக்க நம்மவர்கள் பார்க்கிறார்கள். அதே மாதிரி நமது போக்கு வரத்து மார்க்கங்களையும் நமது எதிரி குலைக்கப் பார்க்கிறான். எப்படியோ, விமானத்திலிருந்தோ, தரை மார்க்கமாகவோ, போர் முனையிலிருப்பவர்களுக்கு ஆகாரம் போய்விடும்.

எண்ணற்ற சாலைகள் தவிடு பொடியாகும்

ஆனால், ஜெர்மனியிலும், ஜெர்மன் ஆதிக்கத்திற்குள்ளகப்பட்ட நாடுகளிலும், நேச தேச குண்டு வீச்சு என்றால், எண்ணற்ற சாலைகள் தவிடு பொடியாகும். ரயில் பாதைகள் நாசமாகும். வீடுகள் தூளாகும். எத்தனையோ பேர்கள் சேதமடையக் கூடும்.

அவற்றின் பயனாக வேலையற்றோரும், காயமடைந்தோரும், அநாதைகளாவோரும், குழந்தை குட்டிகளைப் பறி கொடுப்போரும் அதிகமாவார்கள். அவர்களுக்குச் சோற்றுக்கு ‘லாட்டரி’ தான். பசிப் பிணியாலே பலர் மடிவார்கள். இப்படியே நிலைமை நீடித்திருந்தால், பொது ஜனங்களுக்கு ஆத்திரம் மிஞ்சுமல்லவா? ‘என்னடா எழவு யுத்தம் வேண்டியிருக்கு?’ என்று எண்ணி, அவர்கள் கொதித்தெழுந்து கலகம் செய்யக் கூடும். ஹிட்லருக்கு அதுவே இரண்டாவது போர்முனையாகக் கூடும். ஊரை விட்டு, நாட்டை விட்டு, அவர் எங்கேயோ போர்க் களத்தில் உட்கார்ந்து கொண்டு, உருப்படாத யோசனைகளைச் சொல்லிக் கொண்டு கிடக்க, உள் நாட்டிலே எல்லாம் உளுத்துப் போய்க் கொண்டிருக்கிற தென்றால், நன்றாகவா இருக்கிறது? ஆகவே, உள் நாட்டில் உள்ளவர்களுக்கு அடிக்கடி சமாதானம் சொல்ல வேண்டிய கடமை ஹிட்லருக்கும், அவரைச் சேர்ந்தவர்களுக்கும் ஏற்பட்டுக் கொண்டே யிருக்கிறது.

ஹிட்லர் மனசில் உள்ளதை கப்பரைவாயரான கொபல்ஸ் துரை பெர்லினிலிருந்து கொண்டு, தினம் வெளியிட்டுக் கொண்டே யிருக்கிறார். ‘ஜெர்மன் மக்கள் தைரியத்தைக் கைவிடக் கூடாது. இது கடுமையான சோதனைக் காலம். இப்பொழுது மனந் தளர்ந்து, கோட்டை விட்டு விட்டால், முழு மோசமாகி விடும். ஜெர்மன் மக்களனைவருமே, எந்நாளுமே பிறர்க்கு அடிமைகளாகவே வாழவேண்டி வந்து விடும்” என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார் அவர்.

உண்மையிலே ஜெர்மன் மக்களின் மனம் குலையவே குலையாது என்று கொபல்ஸ் துரைக்குத் தோன்றும் பக்ஷத்தில், அவர் இப்படி யெல்லாம் பேசவேண்டிய அவசியம் இல்லை யல்லவா? மழை வருமோ என்று ஒருவர் சந்தேகப்பட்டு மானத்தைப் பார்த்தால் தானே, அருகிலிருப்பவர் “சும்மா போங்க ஸார், மழை ஒன்றும் வராது!” என்று சொல்லுவார்.

“என்னய்யா இது, நாம் இடிபடாதிருக்க வரம் பெற்றிருக்கிறோம் என்று முன்பெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தீரே! இப்பொழுது இடி மேலிடியாகப் பட வேண்டி யிருக்கிறதே!” என்று யாராவது கேட்பார்களோ என்ற கலக்கத்தில் தான், ஹிட்லர் கூட சமீபத்தில் பேசிய போது, “அமெரிக்கா தூரத்தி லிருக்கலாம். ஆனால் நமது வஞ்சத்தைத் தீர்த்து கொள்ள அடுத்தாப் போலவே ஒரு கண்டம் இருக்கிறதே, பதினெட்டு மைல் வாய்க்காலுக்கு அப்பாலே! அதன் மீது பழிக்குப்பழி வாங்குவோம்” என்று கூறினார் ஹிட்லர்.

அடுத்த வருஷத்தில் கடுஞ் சோதனை?

அதனாலே, “பிரிட்டிஷ் மக்கள் வருகிற வருஷத்திலே கடுஞ் சோதனைக்கு ஆளாக வேண்டி வரலாம். ஆனால், சீமையைத் தேடி வரும் ஜெர்மன் விருந்தாளிகளுக்கு சூடான உபசாரம் செய்தனுப்ப பிரிட்டனில் ஏகப்பட்ட பேர்கள் காத்திருக்கிறார்கள்” என்று பெரிய அதிகாரிகளில் சிலர், அவ்வப்போது சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

சீமை மீது இப்பொழுதும் ஜெர்மன் விமானங்களில் ஒரு சில, திருட்டுத் தனமாகப் புகுந்து, பறந்து, குண்டுகளை வீசிக் கொண்டு தானிருக்கின்றன. ஆனால், முன்பு போல, ஏகப்பட்ட விமானங்கள் செல்லுவ தில்லை. சீமைக்குப் போகும் வழி மறந்து விடப்படாது என்று தனித் தனியாக அவர்கள் சீமைக்குச் செல்லுகிறார்கள் போலிருக்கிறது.

சீமைக்கு அனுப்ப இப்பொழுது ஹிட்லருக்குத் தாராளமாக விமானங்கள் இருக்கின்றனவா என்ன? இருப்பதை யெல்லாம் தான், அவர் ருஷ்யச் சூதாட்டத்தில் கொண்டு சிக்க வைத்து விட்டாரே! இத்தாலி வேறே அவரது “ஸ்டாக்”கில் ஒரு பகுதியை எடுத்துக் கொண்டு விட்டது. புதிதாக விமானங்களைத் தாராளமாக உற்பத்தி செய்யவோ வகை யில்லாது, தொழிற்சாலைகளை நேச தேசத்தார் பாழாக்கி வருகிறார்கள். ஆகவே, ஹிடலர், தாம் நினைக்கிறபடி வஞ்சம் தீர்த்துக் கொள்ள முடியவில்லை.

அவரால் வஞ்சம் தீர்த்துக் கொள்ள முடிகிறதோ இல்லையோ, அவரும் அவரது கட்டளைப்படி நடக்கும் அவரது சிஷ்யப் பிள்ளைகளும் செய்யும் அக்ரமங்களுக் கெல்லாம், ருஷ்யர்கள் ஜாபிதா தயாரித்து வருகிறார்கள். அவற்றிற் கெல்லாம் மேற்கண்டவர்கள், யுத்தம் முடிந்ததும் தனித் தனியே பதில் சொல்லி யாக வேண்டும்.

இந்த வகையில், கியெப் நகரத்திலே மட்டும், ஜெர்மானியர் ஒரு லக்ஷம் பேர்களைச் சுட்டெரித்து விட்டார்களாம். அவர்களது சவங்கள் ஒரு மலைச் சந்தில் கிடந்தனவாம். என்ன அநியாயம்!

30 மைல் முன்னணி 20 மைல் முன்னேற்றம்

ருஷ்யாவிலே ஜெர்மானியர் எங்குமே சமாளித்து நிற்க முடியாது திணறுகிறார்கள். ருஷ்யர்கள், நாலு நாட்களுக்கு முன்பு, நீப்பர் வளைவிலே சிக்கிக் கொண்டுள்ள நாஜிப் படைகளை நிர்மூலமாக்கவும், மேற்கொண்டு முன்னேறவும் பெரிய தோர் தாக்குதலைத் தொடங்கினார்களாம். அவர்களது முன்னணி முப்பது மைல்கள் பரந்திருக்கின்றது. அந்த முன்னணி அப்படியே இருபது மைல்கள் முன்னேறி விட்டதாம்.

ஷிடாமிர் என்பது ஒரு முக்கியமான ரயில்வே ஜங்ஷன். கியெப் என்ற நகரத்திற்கு மேற்கிலே எண்பது மைல் தூரத்திலிருக்கிறது இது. இதை நவம்பர் மாதம் 12-ம் தேதியில் ருஷ்யர்கள் கைப்பற்றினார்கள். இந்த இடத்தின் முக்யத்துவத்தை உணர்ந்துள்ள ஜெர்மானியர், தங்களது பலமெல்லாம் சேர்த்து, இந்த ஊரைப் பிடித்து விட்டார்கள். இந்தப் பிரதேசத்தில் வெகு கடுமையான யுத்தம் நடந்து கொண்டிருக்கிறதாம்.

இந்த யுத்தத்திலே, நாஜிகளுக்கு அளவில்லாத நஷ்டமாம், ஏகப்பட்ட ஆயுதங்களையும், டாங்கிகளையும், ஆட்களையும் ஜெர்மன் சேனாபதி இங்கே குவிக்கச் செய்திருக்கிறாராம். இங்கே மேலும் வெற்றி கண்டாலாச்சு. இல்லாவிட்டால், இங்கே விழுகிற உதையிலே, அவரும் அவரது படைகளும், நேரே ருமேனியாவில் போய் சுருண்டு விழ வேண்டி வரலாம்.

அதற்காகப் பயந்து நாஜிகள் சும்மா இருந்து விடவில்லை. சாத்தியமான இடங்களில் எல்லாம் கடுமையாகவே முன்னேறித் தாக்க முயலுகிறார்கள். ஆனால் ருஷ்யர்களோ குரங்குப் பிடியாகப் பிடித்துக் கொண்டு, எந்த இடத்தையும் விடச் சம்மதிக்க மாட்டேன் என்கிறார்கள். அவர்கள் மாரிகாலப் போருக்கும் தயாராக இருக்கிறார்கள். மாரி காலத்தில் நாஜிகளுக்கு என்னென்ன அளிக்கப் போகிறார்களோ அவர்கள் தெரியவில்லை.

இரண்டாவது போர் முனை ஆரம்ப மாகலாம்

கிரிமியாவிலே போர் நடந்துகொண்டு தானிருக்கிறது. கெர்ச் ஜலசந்தி அருகே, ருஷ்யர்கள் கால்வழியாக வந்து இறங்கிப் போராடுகிறார்களாம். இதற்கிடையிலே, லண்டனிலே எதிர்கால ஐரோப்பா பற்றி எல்லாம் பேசி முடிக்க நேசதேசக் கமிட்டி கூட ஆரம்பித்து விட்டது. அதோடு, மூவல்லரசுகளின் பிரதிநிதிகளும் கொண்ட, யுத்தக் கமிட்டி ஒன்று லண்டனில் கூடப் போகிறதாம். சீக்கிரமே ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனை ஆரம்பமாகக் கூடும் என்று இதிலிருந்து யூகித்துக் கொள்ளலாம் போலிருக்கிறது. கூடிய சீக்கிரமே ஸ்டாலின், சர்ச்சில், ரூஸ்வெல்ட் ஆகிய மூவரும் சந்திக்கலாம் என்று தோன்றுகிறதாம். அவர்கள் சந்தித்துப் பேசிய பின் பெரிய நிகழ்ச்சிகள் இருக்கலாம்.

''தற்சமயம் இத்தாலியப் போரின் வேகம் குறைந்திருக்கிறது, அதற்குத் தார்க் குச்சி போட வேணும்'' என்று ருஷ்யர்கள் சொல்லுகிறார்கள்.

இத்தாலியிலே பிரிட்டிஷ் எட்டாவது சேனை ஒரு புரமும், பிரிட்டிஷ் ஐந்தாவது சேனை ஒரு புரமும், ஆங்காங்கே அமெரிக்கப் படைகளும் இருந்து போராடுகின்றன. எங்கும் கனமழை பெய்கிறதாம். ஒரே சக்தியும் தண்ணீருமாக இருந்தால், டாங்கிகளும், லாரிகளும், பீரங்கி வண்டிகளும் எப்படி ஐயா முன்னே போக முடியும்? இரண்டு கட்சியினருக்கும் மழை வந்தால் கஷ்டம் தான். ஆனாலும் நேசதேசப் படைகள், தாங்கள் பிடித்த பிரதேசங்களைக் கைவிட்டு விடவில்லை. ஏதோ ஒரு இடத்தில் கொஞ்சம் பின்வாங்க நேர்ந்தது.

மலைப் பிரதேசம், சாமான்கள் கோவேறு கழுதைகளின் முதுகுகளில் ஏறிப் போகவேண்டி யிருக்கிறது. எதிரிகள் மலைகளில் ஒளிந்திருக்கிறார்கள். ஆனாலும் நம்மவர்கள் அவர்களது நெருப்பு மழையை லக்ஷ்யம் செய்வதாகவே இல்லை. இரு தரப்பிலிருந்தும் கிளம்பும் வேவுப் படைகள் தத்தம் எதிரிகளிடை வெகுதூரம் சென்று திரும்புகிறார்களாம்.

வாடிகன் நகரத்திற்குச் செல்லும் பாதையில் நாஜி குண்டர்கள் காவலிருக்கிறார்களாம். அருகேயுள்ள ரோமாபுரியில் யாரும் நிம்மதியாக இல்லையாம். இதே, ரோமாபுரிக்கு வரும் ரஸ்தாவில் புகுந்து, முன்னேறி வரத் தான் நேசதேசப்படைகள் போராடிக்கொண்டிருக்கின்றன.

நாஜிகளையும் ஏமாற்றிய சென்னை வாசி

சென்ற வாரம் சென்னை வாசிகளுக்கு ரஸம் தரும் சம்பவம் ஒன்று இத்தாலியிலே நடந்தது. ஆப்பிரிக்கப் போரில் ஜெர்மானியரிடம் பிடிபட்ட **மேஜர் குமாரமங்கலம்** என்பவர், இத்தாலியில் உள்ள ஜெர்மன் காவல்கூடத்திலிருந்து, தந்திரமாகத் தப்பித்துக்கொண்டு, பிரிட்டிஷ் படைகளோடு வந்து சேர்ந்துவிட்டாராம். மேஜர் குமாரமங்கலம், டாக்டர் பி. சுப்பராயனின் குமாரர், நாஜிகளுக்கு நம் ஆட்களிலும் ஒருவர் கடுக்காய் கொடுத்து விட்டாரய்யா!

ஒரு விஷயம் சொல்ல மறந்து போச்சே! நாலு நாட்களுக்கு முன் 86 தடவையாக பிரிட்டிஷ் விமானங்கள் பெர்லின் நகர்மீது குண்டு மழை பொழிந்ததாக மேலே குறிப்பிட்டோமல்லவா? அந்த மழையோடு துண்டுப் பிரசுர மழை ஒன்றையும் பொழியச் செய்தார்களாம் அந்த விமானங்களில் சென்றவர்கள். அப்பிரசுரங்களில் என்ன எழுதி யிருந்தது தெரியுமா?

'ஹிட்லர் ருஷ்யாவில் திண்ணமாகத் தோற்றுவிட்டார். அங்கிருக்கும் நாஜிகள் தலை தப்புவதே சிரமம். தனது முடிவு சமீபித்துவிட்டது என்பதும், ருஷ்யப் போர் படுமோசமாக முடியும் என்பதும் ஹிட்லருக்கு நன்றாகத் தெரியும். நாமோ அழியப்போகிறோம், அதனால் ஜெர்மனியையும் அழித்து விட்டுப் போகலாம் என்று அவர் எண்ணியிருக்கிறாப் போலிருக்கிறது. ஆகவே உஷார்!' என்றிருந்ததாம் அந்தப் பிரசுரங்களிலே. குண்டுகளையாவது போட்டுவிட்டுப் போகட்டும், இந்தத் துண்டு (பிரசுரங்களைப் போடாமலிருக்கப்படாதா என்று ஹிட்லர் எண்ணியிருக்கக் கூடும்) குண்டுகளைவிட இந்தப் பிரசுரங்கள் ஜெர்மன் மக்களின் மனோ திடத்தைச் சீக்கிரமே குலைக்கக் கூடு மென்பது தான் இதில் உள்ள ரகசியம்.

சென்ற வாரம் ருஷ்யாவில், ஷிடோமீர் என்ற இடத்தைக் கைப்பற்றியதும், துருக்கிக்கு அருகில் உள்ள பிடிகானஸ் தீவுகளில் ஒன்றான லீராஸ் தீவைப் பிடித்ததும், ஜெர்மானியர் கண்ட இரண்டு வெற்றிகளாகும். லீராஸ் தீவை ஏக நஷ்டத்தின்பேரில் அவர்கள் பிடித்தார்களாம். பால்கன் பிரதேசத்திற்கு ஆபத்து வந்து விடப் போகிறதே; பிடிகானஸ் தீவுகளில் நேசதேச ஆதிக்கம் வலுத்தால், கருங்கடலுக்குப் போகும் மார்க்கத்தைத் திறந்து விட்டது போலாகுமே; அப்புறம் துருக்கியின் மனோபாவமும் சட்டென்று மாறுமே என்ற பீதியில் தான் நாஜிகள் லீராஸ் தீவு விஷயத்தில் இவ்வளவு சிரத்தைக் காட்டி யிருக்கிறார்கள். இது போனதால் நமக் கொன்றும் குடி முழுகிவிட வில்லை. இதனால் பால்கன் பிரதேசத்திற்கோ, மற்றொரு பிரதேசத்திற்கோ ஏற்படக் கூடிய தலைவலி நின்று போய்விடப் போவ தில்லை.

பல சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டும்

நேசதேசத்தார் எங்கும் விழிப்பாகவே இருக்கிறார்கள். சமீபத்தில் லெபனானில் நடந்த கலவர விஷயத்தில் கூட அவர்கள் சிரத்தை காட்டி, லெபனானில் அமைதி ஏற்பட வகை செய்தார்கள். கைதியான லெபனான் தலைவரும், மந்திரிகளும் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்கள். ஆனால் தலைவர் மட்டும் தான் பதவியிலிருக்கிறார். இன்னும் அங்கே அரசியல் சம்பந்தமான பல சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டியிருக்கின்றன. லெபனான் முக்யமான பிரதேசமாகையால், அங்கு குழப்பமில்லாதிருக்கச் செய்யவேண்டு மென்பதை நேசதேசத்தார் மறந்துவிடவில்லை.

இதோடு, ஜப்பானையும் ஒடுக்க வேண்டுமென்பதையும் அவர்கள் மறந்துவிடவில்லை. கூடிய சீக்கிரமே பஸிபிக் மகா சமுத்திரத்தில் பெரியதொரு கப்பற் போர் நடக்குமென்று ஜோஸியம் சொல்லுகிறார்கள். ஜோஸியம் சொல்லலாமா? என்று கேட்கிறீர்களா?

சொல்லக் கூடாது தான். குள்ளர்கள் ஒருவேளை இந்த ஜோஸியத்தை வேண்டுமென்றே பொய்யாக்கிவிடக் கூடும். அவர்கள் தங்களது கடற்படையை வெளியே கொண்டுவராமலே பதுக்கி வைத்து விட்டால், யுத்தம் எப்படி நடக்கும்?

ஆனால் அவர்களை அமெரிக்கர்கள் சும்மா இருக்க விடவில்லை. போன வாரம், அமெரிக்க விமானிகள் மத்திய பஸிபிக் பிரதேசத்தில் ஜப்பானியர் வசமுள்ள ஒரு தீவுக் கோஷ்டி ஒன்றை விடாது விமானங்களால் தாக்கிவிட்டு, பிறகு தங்கள் படைகளையும் கொண்டு இறக்கி விட்டார்களாம். இந்தத் தீவுகள் அமெரிக்கர் வசம் வந்துவிட்டால் ஹவாய் தீவுகளுக்கு ஆபத்து குறையும். அதோடு, டோக்கியோவிற்குச் செல்லுவதாக உள்ள புரோகிராமில் இது ஒரு முக்கிய கட்டமாக இருக்கும்.

பர்மா முனையில் ரோந்து வேலைகள் பலமாக நடக்கிறது. மவுண்ட்பாட்டன் பிரபு தமது வேலையில் சிரத்தை காட்டத் தொடங்கிவிட்டாராம்.

ஜப்பானியர் சமீபத்தில் ஆறு நாட்களில் ரபால் அருகே நூற்றிரண்டு விமானங்களை இழந்துவிட்டார்களாம். ஜாவாவில் உள்ள ஜப்பானிய எண்ணெய் சுத்திகரிப்பு ஸ்தலங்கள் மீது அமெரிக்க விமானங்கள் குண்டுகளை வீசியிருக்கின்றன. இவ்வளவு தானா? இன்னும் நிறைய இருக்கிறது ஜப்பானியருக்குக் கிடைப்பதற்கு. 'திரும்பவும் ஜோஸியமாக' எண்ணுகிறீர்கள், இது நடக்கும்.

(6-ம் பக்கம் தொடர்ச்சி.)

மேல் போர் தொடுத்த காரணத்தைப் பற்றி சென்ற வருஷம் அக்டோபர் மாதம் டாக்டர் கோபபல்ஸ் ஒரு வியாக்கியானம் செய்தார். அதில்,

''சென்ற காலத்தில், நாம் பிரயோசனமில்லாத லட்சியங்களுக்காகப் போராடினோம். ஆனால் இப்போது கோதுமைக்காகவும், பெட்ரோல் எண்ணெய்க்காகவும் தான் போராடுகிறோம்.''

என்று அவர் விளக்கமாக கூறிவிட்டார். இரண்டு வருஷங்களுக்கு முன், அதாவது 1941-ம் வருஷ ஜூலை மாதம், ஜெர்மனி ரஷ்யாவைத் தாக்கிய சில வாரங்களுக்குப் பிறகு, ஜெர்மனியின் லட்சியத்தைப் பற்றி, ''தாஸ் ஷ்வார்சி கோர்'' என்ற பிரபல ஜெர்மன் பத்திரிகை விவரித் திருக்கிறது. அந்தப் பத்திரிகை என்ன எழுதியிருக்கிறது? ஹிட்லர் கூறியதற்கு நேர் விரோதமாக எழுதியிருக்கிறது :—

''போல்ஷிவிசக் கொள்கையி லிருந்து ஐரோப்பாவை பாதுகாப்பதற்காக, ஜெர்மனி ரஷ்யாவுடன் போராடுகிற தென்பது மிகத் தவறான அபிப்பிராயம் ரஷ்யாவோடு நாம் போர் புரிவது, கலையைக் காப்பாற்றுவதற்கல்ல, நாகரிகத்தைக் காப்பாற்றுவதற்கல்ல, ஜன நாயகத்தைக் காப்பாற்றுவதற்கல்ல—ஜெர்மனி ஒன்றைக் காப்பாற்றுவதற்குத் தான்.''

இப்படி ஜெர்மானியரிட மிருந்தே ஓரோர் சமயத்தில் உண்மைகளும் வெளி வருகின்றன. ஜெர்மானியர் மாத்திரமல்ல, ஜப்பானியரும், சிற்சில சமயங்களில், உண்மையை வெளியிடுகிறார்கள். உதாரணமாக நவம்பர் 2-ந் தேதி, டோக்கியோ வானொலி நிலையம் மாஸ்கோ மகா நாட்டின் முடிவைப் பற்றி கூறும் போது,

''ஐரோப்பாவில் நடக்கும் யுத்தத்தை விரைவில் முடித்து விடுவதற்காக, அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா ஆகிய மூன்று தேசங்களும் சில ஏற்பாடுகள் செய்ய முடிவு செய்திருக்கின்றன. ஜெர்மனி நிபந்தனையில்லாமல் சரணாகதி யடையும் வரைக்கும், ரஷ்யா நேசதேசத்தாருடன் கட்டாயம் ஒத்துழைக்கும்''

என்று டோக்கியோ உறுதியுடன் கூறுகிறது. இதனால் தான் தப்பித்துக் கொண்டு விட்டதாக ஜப்பான் நினைக்க வில்லை. காசபிளாங்கா மாகாநாட்டில், ஜப்பானும் நிபந்தனை யில்லாத சரணாகதி யடையும் வரை அதை விடப்போவதில்லை என்று நேச தேசத்தார்கள் கூறியதை, ஜப்பான் நினைவில் வைத்திருக்கிறது. ஏனென்றால், தனக்கு ஏற்படப் போகும் முடிவிலிருந்து தப்பித்துக் கொள்ள முயற்சி செய்வதற்காக, ''அகில கிழக்காசிய மகாநாடு'' ஒன்றை சமீபத்தில் ஜப்பான் கூட்டி யிருக்கிறது. டோக்கியோவில் நடந்த இந்த மகா நாட்டைப் பற்றி, ஜப்பானிய பத்திரிகையாகிய ''அசாகி ஷிம்பன்'' புகழ்ந்து எழுதி யிருக்கிறது.

மகா நாடு மிக வெற்றிகாமாக நடந்ததென்றும், கிழக்காசியாவிலுள்ள தேசங்களெல்லாம் ஒன்று சேர்ந்து ஜப்பானுடைய யுத்த முயற்சியில் ஒத்துழைத்து யுத்தத்தை வெற்றிகரமான முடிவுக்கு கொண்டுவர உதவி செய்வதென்று தீர்மானிக்கப் பட்டதென்றும், அந்தக் கட்டுரை கூறுகிறது.

யாருக்கு நல் வாழ்வு ?

இதனால் ஜப்பானுடைய ''கிழக்காசிய கூட்டு வாழ்க்கைத் திட்டம்'' யாருக்காகப் பயன் படுகிற தென்று நன்றாக விளங்குகிறது. சென்ற மார்ச்சு மாதம் சிங்கப்பூர் அரசாங்கத்தின் உதவித் தலைவர் கர்னல் வேட்டமா இதை விளக்கமாகக் கூறிவிட்டார்.

''ஜப்பானுடைய நோக்கம் தன்னுடைய ஆதிக்கத்திலுள்ள நாடுகளிலுள்ள எல்லா மூலப் பொருள்களையும் யுத்தத்திற்காக உபயோகப் படுத்துவது தான்''

என்று தெரிவித்தார். டோக்கியோ மகா நாட்டில் கூடிய ஆசிய நாட்டு அடிமை அரசாங்கங்களின் தலைவர்கள், ஜப்பான் கேட்டதை எல்லாம் கொடுப்பதாக ஒப்புக் கொண்டிருப்பார்கள். ஒப்புக் கொள்ளும்படி கட்டாயப்படுத்தப் பட்டிருப்பார்கள். இதைத் தான் பெரிய வெற்றி என்று ஜப்பானியர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் முடிவான வெற்றிக்கு—அதாவது ஜெர்மனியின் ஆதிகத்தின் கீழும் ஜப்பானுடைய ஆதிக்கத்தின் கீழும் வருந்தும் நாடுகளின் விடுதலை வெற்றிக்கு—காலம் நெருங்கி கொண்டு வருகிறது. அந்த வெற்றியை மாஸ்கோ மகா நாடு மிக நெருக்கத்தில் கொண்டு வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கிறது. ''ஜெர்மனி சரணமடையப் போவதில்லை'' என்று ஹிட்லர் சென்றவாரம் கூறினார்; 12-மணி அடித்த பிறகு தான் ஆயுதங்களைக் கீழே போடப் போகிறோம் என்றார். யுத்தம், ஹிட்லருடைய மணிக் கணக்கின்படியாவது டோஜோவின் மணிக் கணக்கின்படியாவது இப்போது நடக்கவில்லை. நேச நாடுகளின் காலத்திட்டத்தின்படி நடக்கின்றது. மிஸ்டர் சர்ச்சில் கூறியபடி, 1944-ம் வருஷ முடிவுக்குள், நேச நாடுகள் வெற்றியடையப் போகின்றன. அப்போது எதிரிகள் நிராயுதபாணிகளாக சுதந்தர உலகத்தின் முன் நிற்பார்கள் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

போருக்குப் பின் பெண்கள் நிலை

டாம்பீகம் ஒழிந்து, சிக்கனம் உயர்ந்தது

எதிர்காலத்தில் பெண்களின் வேலை

சென்னை அகில இந்திய வானொலி நிலயத்திலிருந்து "யுத்த முயற்சி" என்னும் தலைப்பின் கீழ் ஸ்ரீமதி டி. எஸ். குஞ்சிதம் குருசாமி அவர்கள், ஒலிபெருக்கிய பிரசங்கம் வருமாறு :—

இந்தியப் போரில் ஆண்கள் மட்டும் ஈடுபடவில்லை. பெண்களும் ஈடுபட்டிருக்கின்றனர். உலக சரித்திரத்திலே இது ஒரு அதிசயமான போர். சண்டை போடுமிடங்களை மட்டுமே போர்முனைகள் என்று கூற முடியாது. தொழிற்சாலைகள், கடைத் தெருக்கள், வீடுகள், பத்திரிகை நிலயங்கள், ஆஸ்பத்திரிகள், ஆகிய எல்லாம் போர்முனைகளேயாகும். நாள்தோறும் பத்திரிகை படிப்பவர்களுக்கு இது நன்கு விளங்கும்.

ஆண்களும் பெண்களும் செய்யும் தொண்டு

இப்போரில் ஆண்கள் கடலைக் கிழித்துச் செல்கின்றனர் ; பெண்கள் நிலத்தைக் கீறிப் பயிரிடுகின்றனர். போர் முனைகளில் ஆண்கள் நெருப்புக்கு முன்பு நிற்கின்றனர் ; நகரங்களில் பெண்கள் குண்டு வீச்சினால் ஏற்படும் நெருப்பை அணைக்கின்றனர். ஆண்கள் போர்க் கருவிகளை உபயோகிக்கின்றனர் ; பெண்கள் அக்கருவிகளைச் செய்து கொடுக்கின்றனர். ஆண்கள் கைகால் முறிந்தும் காயப்பட்டும் வருகின்றனர் ; பெண்கள் அவர்களுக்குச் சிகிச்சை செய்கின்றனர். ஆண்கள் விமானங்களில் பறந்து செல்கின்றனர் ; பெண்கள் எதிரி விமானங்கள் வருவதை முன்கூட்டிச் சொல்கின்றனர்.

பெண்கள் பீரங்கிகளால் சுடுவதிலும், ரயில் வண்டிகளை ஓட்டுவதிலும், மோட்டார் லாரிகளை ஓட்டிச் செல்வதிலும், கம்பியில்லாத தந்திச் செய்தியை யனுப்புவதிலும், டைப் அடிக்கும் வேலையிலும், டெலிபோன் வேலையிலும், காயம் பட்டவர்களுக்குச் சிகிச்சை செய்வதிலும், டாக்டர் வேலையிலும், தொழிற்சாலை வேலைகளிலும் இன்னும் இவைகளைப் போன்ற பலவிதப் போர் வேலைகளிலும் ஈடுபட்டிருக்கின்றனர்.

ஐரோப்பியப் போர் வெகு சீக்கிரம் முடிந்து விடப் போகிறது. மூன்று எதிரிகளில் ஒருவர் ஓடிவிட்டார். மற்றொருவர் ஓடுவதற்குத் தயார் செய்து கொண்டிருக்கிறார். இது ஐரோப்பிய நிலைமை. கிழக்குப் புறத்தில் போர் மேகங்கள் சேர்ந்து கொண்டிருக்கின்றன. சீக்கிரம் இடியும் மின்னலும் ஏற்படும். மூன்றாவது உலக எதிரியும் சீக்கிரத்தில் புறங்காட்டியோடுவதைப் பார்க்கப் போகிறோம்.

பெண்களைத் துச்சமாக எண்ணிய காலம் போய் விட்டது

பெரிய மாளிகையை இடித்துத் தரைமட்ட மாக்கிய பின்பு, அதை மீண்டும் புதுப்பிப்பதற்கு எவ்வளவு முயற்சிகள் தேவையோ, அதைப்போலவே, இப்போர் முடிந்ததும் உலகத்தில் ஏற்படப்போகும் பல மாறுதல்களுக்கும் பலவிதமான முயற்சிகள் தேவைப்படும். இப்போரில் எவ்வாறு பெண்கள் தங்களுடைய சுயநலத்தை விட, உலகப் பொது நலத்தைப் பெரிதாகக் கருதித் தொண்டு புரிந்து வருகிறார்களோ, அதைப்போலவே போர் முடிந்ததும், புதிய சமாதான உலகத்தைச் சமைப்பதிலும் பெண்கள் தங்களாலானதைச் செய்வதற்குத் தயாரா யிருக்க வேண்டும். எல்லாத் துறைகளிலும் பெண்கள் முன்னேறி விட்டனர். முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். இன்னும் முன்னேறுவர். பெண்களைப் பற்றித் துச்சமாக எண்ணி யிருந்த காலம் சென்று விட்டது. "ஆடவரைப் பெற்றெடுத்த தாய்க் குலத்தைப் பெண் குலத்தைத் துஷ்டருக்குப் புற்றெடுத்த நச்சரவைப் புல்லெனவே" எண்ணி யிருந்த காலம் போய் "வன்மை, உயர்வு, மனிதர் நலமெல்லாம் பெண்மையினால்" வந்ததென்று உலகம் அறிந்து கொள்ள ஆரம்பித்து விட்டது.

கோஷாப் பெண்கள் ஆண்களோடு நின்று உழைக்கின்றனர்

இப்போரின் பயனாகப் பல கஷ்டங்கள், கொடுமைகள், சேதங்கள் சொல்ல முடியாத துயரங்கள், உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன ஒருபுறம். ஆனால் பல புதிய அனுபவங்கள், புதிய திறமை, புதிய கருத்துக்கள் கிடைத்திருக்கின்றன மற்றொரு புறம். உதாரணம் பெண்களின் முன்னேற்றத்தைக் கூறலாம். "கோஷா" முறையைக் கொண்டிருந்த பல பெண்கள் இந்தியாவில் இன்று போர்த் தொழில்களில் ஈடுபட்டு ஆண்களோடு சரிசமமாகப் பழகி வருகின்றனர். போரில் ஏற்பட்ட மாறுதல்கள், பெண்களின் மனப் போக்கையும் ஒருவாறு மாற்றி யிருக்கிறதெனக் கூறலாம். சாதாரண உடைக்குப் பதிலாக இராணுவத்தைச் சேர்ந்த உடைகளை யணிவதாலும், பெண்களுக்குப் பல துறைகளிலும் ஏற்பட்டிருக்கும் பயிற்சியினாலும், போர் சம்பந்தமான ஆபத்துக்களைச் சமாளிக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருப்பதாலும், பெண்கள் தங்களைத் தாழ்ந்தவர்களென்று நினைத்துக் கொண்டிருந்த உணர்ச்சி ஒரு சிலருக்காவது நீங்கி விட்டது. இந்த ஒரு சிலரும், போரினால் பெற்றுள்ள அனுபவத்தைக் கொண்டு, போருக்குப் பிறகும், தியாக உணர்ச்சி, பொதுநல சேவை முதலிய உயரிய குணங்களைப் பெற்று, சமூகத்திற்குத் தொண்டாற்றக் கூடியவர்களாய் விளங்குவார்கள் என்பது நிச்சயம்.

புரட்சி மனப்பான்மை

போரின் பயனாக, பெண்களின் மனப்பான்மையில் ஒரு புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டு வருவது, பிற்காலத்தில் நல்ல பலனை தரு மென்பதில் சந்தேகமில்லை.

போரில் இப்போது துணைப் படைத் தொண்டர்களாகவும், இராணுவ மோட்டார் ட்ரைவர்களாகவும் வேலை செய்து வருபவர்கள் போருக்குப் பிறகு ஏற்படும் சமாதான உலகத்தில் ஆம்புலன்ஸ் ட்ரைவர்களாகவும், ட்ராம் வண்டி, ரயில் வண்டி முதலியவைகளை ஓட்டுபவர்களாகவும் வேலை செய்யலாம். இவர்களில் நல்ல உடலுறுதியும் தைரியமும் உடையவர்கள் போலீஸ் படைகளிற் சேரலாம். நம் நாட்டில் போபால் சமஸ்தானத்தில் பெண்கள் போலீஸ் படையைப் பரீட்சார்த்தமாக ஏற்படுத்தி யிருக்கிறார்கள் என்பதை நீங்கள் 2 அல்லது 3 வாரங்களுக்கு முந்திப் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். போபால் சமஸ்தானத்தைப் பின்பற்றி, இனி, பல மாகாணங்களிலும், இவ்வாறு பெண்களின் பிரத்தியேக போலீஸ் படையை ஏற்படுத்துவது அவசியமாக ஏற்படும். துருக்கியில் கமால்பாஷா, பெண்கள் இராணுவத்தை உண்டாக்கினார். ரஷ்யாவில் பெண்கள் பாரச்சூட்டு குடைகள் மூலம் விமானங்களிலிருந்து குதிக்கின்றனர். நம் நாட்டில் பெண்கள் போலீசிலாவது சேரக் கூடாதா என்று எதிர் பார்ப்பது நியாயந் தானே ? பெண்கள் சம்பந்தமான பல அமைப்புக்கள் இந்தியாவில் இருக்கின்றன. இப்போருக்குப் பின் இன்னும் பல அமைப்புக்கள் ஏற்படப் போகின்றன. இவைகளுக்கு, அவசியம் பெண் போலீஸ் படை தேவையா யிருக்கும்.



அமெரிக்கக் கடற் படையைச் சேர்ந்த ஒரு பெண் 'பாரச்சூட்' நைந்து போகாதிருக்கும் பொருட்டு, காய்ச்சிய மெழுகில் தோய்க்கின்றார்.

ஏ.ஆர்.பி. பெண் வார்டன்களும் சமூகத் தொண்டும்

இந்தியப் பெண்களில் பலர் ஏ.ஆர்.பி. படைகளில் வேலை செய்து வருகின்றனர். உதாரணமாக, சென்ற ஆண்டு முடிவில், வங்காள மாகாணத்தில் மட்டும் 1,100 பெண்கள் ஏ.ஆர்.பி. படையில் சேர்ந்திருந்தனரென்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. சென்னை மாகாணத்திலும் பல பெண்கள் ஏ.ஆர்.பி. படையில் சேர்ந்திருக்கின்றனர். போர் முடிந்ததும் இவர்கள் நகரசபைகளுக்குத் தேவையான பலவித உதவிகளைச் செய்வதற்குப் பயன் படுவார்கள். ஜன கணிதம் எடுப்பதற்கும், பெண்களிடம் பிரசாரம் செய்வதற்கும் வீடுகளைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கூறுவதற்கும், ஏ.ஆர்.பி. பெண் வார்டன்கள் உபயோகப்படுவார்கள். இவர்கள் பொது மக்களோடு நெருங்கிப் பழகியவர்களாதலால், சமுதாய சேவைக்கும் பெரிதும் லாயக்கானவர்களாய் இருப்பார்கள்.

கிராமங்களில் சுகாதார வேலையின் அவசியம்

இனி, "நர்சு"களாகவும், "டாக்டர்"களாகவுமுள்ள பெண்கள் போர் முடிந்த பிறகு, நகரங்களை விட கிராமங்களில் தான் அதிகமான சேவை செய்ய வேண்டும். நம் நாட்டிலுள்ள லட்சக் கணக்கான கிராமங்களில் வைத்திய உதவியோ, "நர்சு"களின் உதவியோ, சிறிது கூட இல்லையென்றே கூறலாம். கிராமங்களிலுள்ள சுகாதாரக் கேடுகளின் காரணத்தினால், நகரங்களை விட, அதிகமான நோய்கள் அங்கு பரவுகின்றன. தொத்து நோய்களினால் நம் நாட்டில் உயிர்ச் சேதம் வரவர அதிகரித்துக் கொண்டே யிருக்கிறது. இச் சேதத்தைத் தடுக்க வேண்டிய பொறுப்பு, பெண்களையும் சார்ந்ததாகும். ஆயிரக் கணக்கில் இப்போது பயிற்சி

(10-ம் பக்கம் பார்க்க)

யுத்த காலத்தில் அரசாங்க உதவி

கோயமுத்தூர்

“கோயமுத்தூர் டவுனில், சர்க்காரால் நிர்ணயிக்கப்பட்ட 66 சில்லரை வியாபாரிகள் மூலமாய், பச்சை, புழுங்கல் அரிசி, ஜனங்களுக்கு விற்கப்பட்டு வருகிறது. இன்னும் கூடிய சீக்கிரத்தில் புதிய பங்கீடு முறையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நபர் எண்ணிக்கையைப் பொருத்து, அளவு தீர்மானித்து, பங்கீடுச் சீட்டுகள் கொடுக்க ஏற்பாடு ஆகி வருகிறது. இந்த முறையில் அரிசி பங்கீடு அடுத்த மாதத்திற்குள்ளாக அமுலுக்குக் கொண்டு வரப்படும்.

கோபி தாலூக்காவில் ஜனங்களின் உணவுப் பொருள் டிப்போக்கள் இரண்டு இடங்களில் அதாவது நம்பியூர், கோபிசெட்டிப்பாளையத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. யுத்த காலத்தை முன்னிட்டு உணவுப் பொருள்களை அதிகப்படுத்துவதற்காக, பவானி தாலூகாவில், பெரிய புலியூர், தாளகுளம், முகாசிப்புதூர் முதலிய கிராமங்களில் பிரத்தியேகமாய் பூமிகள் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

கோபிசெட்டிபாளையம் தாலூகாவில் பட்டாளத்தில் சேர்ந்த 145 குடும்பங்களுக்கு உணவுப் பொருள் வாங்க அனுமதிச் சீட்டுக் கொடுக்கப்பட்டு வருகிறது.

தாராபுரம் டவுனில் “ஸ்டாண்டர்டு கிளாத்” சல்லிசான விலையில் விற்கப்படுகிறது. தவிர, இநத ஜில்லாவில் மற்றும் விசேஷமான பெரிய டவுன்களிலும் “ஸ்டாண்டர்டு கிளாத்” கடைகள் திறக்கப்பட்டு வியாபாரம் நடந்து கொண்டிருக்கிறது.

சேலம்

உணவு தானியங்கள் டிப்போக்கள் மூலமாகவும் கூட்டுறவு சங்கங்களின் மூலமாகவும் பொது ஜனங்களுக்கு கிடைத்து வருகிறது. பங்கீட்டு முறை உத்யோகஸ்தர்கள் பூர்வாங்க ஏற்பாடுகள் செய்து வருகின்றார்கள். பங்கீட்டு முறை சீக்கிரமாக அமுலுக்கு வரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. கலெக்டர் ஆபீசில் பிரதி தினமும் அநேக ஏழைகளுக்கு ஸ்ரீமதி. J. R. பெட் அம்மையார் ஆதரவில் அன்ன மளிக்கப்பட்டு வருகிறது. விறகு சம்பந்தமான கஷ்டம் ரெவினியூ அதிகாரிகளின் நடவடிக்கைகளினால், சற்று குறைந்திருக்கிறது. மண்ணெண்ணெ, சர்க்கரை முதலியன பொருத்த வரை, கஷ்டம் இல்லை.

ஓமலூர்

இந்த தாலூகாவில் உணவு தானியங்களை வாங்கிச் சரிவர வினியோகிக்க ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உணவு தானியங்களை வெளி தாலூகாக்களுக்கு கொண்டுபோகா திருக்க, ரெவினியூ அதிகாரிகள் ஏற்பாடு செய்திருப்பதனாலும், அதிகமாக உணவு தானியங்கள் மகசூலாகியிருப்பதினாலும், உணவு தானியத்தைப் பற்றி கஷ்டம் இப்பொழுது இல்லை.

நாமக்கல்

இந்த ஊரிலுள்ள உணவு தானிய டிப்போ மூலம் பிச்சைக்காரர் குழந்தைகளுக்கு பிரதி தினமும் அன்ன மளிக்கப் பட்டு வருகிறது. தாலூகா ராணுவ கமிட்டி, சிப்பாய்கள் குடும்பங்களைப் பற்றி அடிக்கடி விசாரித்து வேண்டிய நன்மைகளைச் செய்து வருகிறார்கள். சிப்பாய்களின் உறவினர்களுக்கு இலவசமாக கல்வி பயில ரெவினியூ அதிகாரிகளால் சர்டிபிகேட்டுக்கள் கொடுக்கப்பட்டு, வசதிகளும் செய்யப்பட்டு வருகின்றன.

ஆத்தூர்

இத் தாலூகாவில் தரிசு நிலங்களில் தீர்வை யின்றி சாகுபடி செய்து, உணவு தானியங்கள் பயிரிடவும், புழைக்கடைகளில் காய்கறிகள் பயிரிடவும் அநேக குடிகளுக்கு ரெவினியு அதிகாரிகளால் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

தங்கினிகோட்டை

ஸப்-தாலூகாவில் நல்ல மழை பெய்ததின் காரணமாக, ஏரிகளிலும் குளங்களிலும் தண்ணீர் நிரம்பி யிருக்கிறது. இதனால் நஞ்சை சாகுபடி இந்த வருஷம் அதிகமாகும் என்றும், ஜனங்களுக்கு வேண்டிய நெல் சாகுபடி யாகுமென்றும் எதிர் பார்க்கப்படுகிறது. உணவு தானியங்களைத் தீர்வையின்றி பயிரிட, அநேகம் குடிகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

திருநெல்வேலி ஜில்லா

திருநெல்வேலி ஜில்லாவில் இந்த மாதத்தில் பல விடங்களில் நல்ல மழை பெய்தது. அரசாங்கத்தார் ஜனங்கள் யாவருக்கும் நெல் மிகச் சௌகரியமாகக் கிடைப்பதற்கான முறைகளைக் கையாண்டு வருகிறார்கள். 2 ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலங்களுடைய நிலச்சுவான்கள், தங்களுக்கு வரும் நெல்லில் 50 சத வீதம் 19 ரூபாய் கிரயத்திற்கு அங்கீகாரம் பெற்ற வியாபாரிகளுக்கு கொடுக்கவேண்டும் என்றும், அவ்விதம் சேகரிக்கப்பட்ட நெல் ஏழைகளுக்கு, ஏழை மக்களின் கடைகள் மூலமாக, விற்கப்படும் என்றும், விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து மாதம் 2,000 டன்களுக்குக் குறையாமல் அரிசி திருநெல்வேலிக்கு வரவழைக்கப்படுகிறது. அப்படி வரவழைக்கப்பட்ட அரிசி, ஏழை ஜனங்களுக்கு ஏழை மக்களின் டிப்போ மூலம் விற்கப்படுகிறது.

தூத்துக்குடியில் வெகு சீக்கிரம் அரிசிப் பங்கீடு வரப்போகிறது. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திருநெல்வேலி ஜில்லாவில் ஒன்பது மலிவுத் துணிக் கடைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சென்ற மூன்று மாதங்களில், சுமார் $1\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய்களுக்கு மலிவுத் துணிகள் ஏழைகளுக்கு விற்பனை செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

யுத்த காரணத்தினால், எதிரியின் ஆக்கிரமிப்பி லிருக்கும் வெளி நாடுகளிலிருந்து, இந்தியா திரும்பின ஜனங்களின் சங்கியை எடுப்பதற்கான முறைகள் நடந்து வருகின்றன.

மண்ணெண்ணெயும் சர்க்கரையும் ஜனங்களுக்குச் சௌகரியமாகக் கிடைக்கின்றன. தேசியப் போர் முனை அமைப்பாளர், தான் செல்லு மிடங்களி லெல்லாம் ஜனங்களின் தேவையைக் கவனித்து, அவற்றை பூர்த்தி செய்யத் தன்னாலான முயற்சிகள் செய்கிறார்.

(9-ம் பக்கம் தொடர்ச்சி)

பெற்று வெளி வரும் பெண் டாக்டர்களும், “நர்சு”களும், போருக்குப் பிறகு நமது நாட்டிலுள்ள கிராமங்களுக்குச் சென்று, தங்கள் தொழிலை நடத்தினால், நல்ல ஊதியம் பெறுவதோடு, உதவி யற்ற நம் மக்களுக்கும் பேருதவி செய்தவர்களாவார்கள்.

போருக்குப் பின் பொருளாதாரச் சிக்கல்கள்

போருக்குப் பிறகு ஏற்படும் புத்துலகத்தில், நம் நாட்டில் பலவிதமான பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்படப் போகின்றன. இப்போது போர் ஆதரவுப் பிரசாரம் செய்து வரும் பெண்கள், அதிகமான உணவுத் தானியங்களைப்பயிரிடுமாறும், பயிரிடாமல் தரிசுகளாய்க் கிடக்கும் நிலங்களைப் பயிரிடுமாறும், உணவுப் பொருள்களை வீணுக்காம லிருக்குமாறும், ஏழைகள் சிக்கன வாழ்க்கை வாழுமாறும், போர் முடிந்த பிறகும் பிரசாரம் செய்யலாம். கிராமத்தில் வீடுள்ளவர்களும், நகரங்களில் தோட்டங்களையுடையவர்களும், உணவுப் பொருள்களைப் பயிரிடுமாறு போர் முடிந்த பிறகும் பிரசாரஞ் செய்ய வேண்டும். போர் காரணமாக, சில சாமான்கள் கிடைப்பது அரிதாகப் போய்விட்ட படியால், பல குடும்பங்களில் பெண்கள் மிகச் சிக்கனமாகக் குடும்பம் நடத்தி வரவேண்டியது அவசியமாகி விட்டது. சில டாம்பீகச் செலவுகள் அடியோடு நிறுத்தப்பட்டு விட்டன. உடைகளிலும் பல டாம்பீக வழக்கங்கள் நின்று விட்டன். இவைகளுக் கெல்லாம் பெரும்பாலும் பெண்களே காரணம். ஏனெனில் அவர்களே குடும்பங்களை நடத்துவதற்குப் பொறுப்பானவர்கள். போருக்குப் பிறகும் இவர்கள் இதே முறைகளையும் வழக்கங்களையும் கையாளுவார்களே யானால், ஏழைக் குடும்பங்களும் நடுத்தரக் குடும்பங்களும் கடனில்லாத நல்வாழ்வு வாழலாம்.

யுத்தத்திற்குப் பிறகும் வேலை யுண்டு

போர் வீரர்களுக்கு வேண்டிய துணி வகைகளை அனுப்புவதற்காக இந்தியாவில் பல்லாயிரக் கணக்கான பெண்கள் தாங்களாகவே தொண்டு புரிந்து வருவது பலரும் அறிந்ததே யாகும். பனியன்கள், ஸ்டாக்கிங்ஸ் துண்டுகள் முதலியவைகளைப் பின்னிக் கொடுத்தும், தைத்துக் கொடுத்தும் பெண்கள் தங்கள் ஓய்வு நேரங்களைப் பலன் தரும் வழியில் செலவழித்து வருகின்றனர். இதைச் சந்தர்ப்பமாகக் கொண்டு, பல பெண்கள் இவ்வேலைகளை முதன் முதலாகப் பயின்றிருக்கிறார்கள். போர் முடிந்து விட்டால், இவர்கள் சும்மா யிருக்க வேண்டியதில்லை. தங்களுடைய ஓய்வு நேரங்களில் தங்கள் குடும்பங்களுக்கு வேண்டிய சிறு சொக்காய்கள், பனியன்கள், குல்லாய்கள், காலணிகள், கைக்குட்டைகள், துண்டுகள் முதலியவைகளைப் பின்னியும், தைத்தும் தங்கள் குடும்பங்களின் பொருளாதார நிலையை விருத்தி செய்யலாம். இதில் நம் பெண்களுக்கு ஒரு விதமான ருசி ஏற்பட்டு விடுமேயானால், இதனால் அவர்களுக் கெனத் தனிமையான வருவாய்க்கு இடமேற்பட்டு விட்டால், அதன் பிறகு சோம்பலோ, வீண் வம்புப் பேச்சுக்களோ ஏற்படுவதற்குச் சந்தர்ப்ப மிருக்காது.

நம் நாடு உயர்வடைய பெண்கள் செய்யவேண்டியவை

இப்போரினால் சாதாரணக் குடும்பப் பெண்கள் கூடப் பல பொது விஷயங்களை உணர்ந்து கொண்டிருக்கின்றார்கள். பத்திரிகையை படித்திராத பெண்களும் எழுத்து வாசனையே யில்லாத பெண்களும், தேசியப் போர் முன்னணிப் பிரசாரத்தின் பயனாக, ஒரு அளவுக்கு அரசியல் விஷயங்களில் அக்கரை எடுத்துக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். மாகாணம் முழுதும் பெண் பிரசாரகர்கள் சொற் பொழிவாற்றி வருகிறார்கள். வீடுகளுக்குச் சென்று பெண்களிடம் பிரசாரம் செய்கிறார்கள். பெண் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று பேசுகிறார்கள். ரேடியோ மூலம் பேசுகிறார்கள். பிரசார மோட்டர் வண்டிகளிலுள்ள ஒலி பெருக்கிகள் மூலம் சொற்பொழி வாற்றுகிறார்கள். இதன் பலனாகப் பல்லாயிரக் கணக்கான பெண்கள், பூகோளம், நம் நாட்டு அரசியல், நாட்டின் பொருளாதார நிலைமை, சுகாதாரம், உணவுப் பொருள், சிக்கன முறை, முதலிய பல விஷயங்களில் ஆரம்ப அறிவைப் பெற்றிருக்கின்றனர் என்பது மிகையாகாது. ஒரு சிறு உதாரணம் கூறவேண்டுமானால், அதிகமாய்த் தீட்டப்படாத அரிசி உடல் வளத்திற்கு நல்லது என்பது, போருக்கு முன்பு எவ்வளவு பெண்களுக்கு நம் நாட்டில் தெரிந்திருந்ததோ, அதை விட ஆயிரம் மடங்கு அதிகமான பெண்களுக்கு இப்போது தெரியும். இம்மாதிரிப் பல துறைகளிலும் நம் பெண்கள் பெற்றுள்ள அறிவைப் போருக்குப் பிறகு வளர்த்தால், நம் நாடு நல்ல நிலைமையை யடையு மென்பதில் சந்தேகமில்லை.

டாம்பீகச் செலவுகள் ஒழிந்தன

மற்றொரு முக்கியமான பலன் இப்போரினால் ஏற்பட்டிருக்கிறது. பல பெண்களிடம் இயற்கையா யிருந்த டாம்பீக உடை, அனாவசியமான அலங்காரங்கள் முதலியவைகள் அவசியத்தின் காரணமாக ஒழிந்து விட்டன. உதாரணமாய், இங்கிலாந்தில் நாகரிக ‘ப்ராக்குகள்,’ லேசுகள், முகப் பவுடர் முதலியவைகளைப் பெண்கள் விட்டு விட்டனர் என்பதைக் கேள்விப் பட்டிருப்பீர்கள். இதே மாதிரி, நம் நாட்டுப் பெண்களும் பல டாம்பீக உடைகளை விட்டு விட்டனர். இந்தப் பழக்கத்தைப் போருக்குப் பின்பும் கைக்கொண்டால், அனாவசியச் செலவும், அனாவசியத் தொல்லையும் பல ஏழை மக்களுக்கு இல்லாமற் போகும்.

கடைசியாக, பெண் மக்களின் தொண்டைப் பற்றி மாஜி வைஸ்ராயின் மனைவியாரான லேடி லின்லித்கோ சொல்லியுள்ள வார்த்தைகளை மட்டும் கூறி, இதை முடிக்க விரும்புகிறேன். இந்தியாவை விட்டு புறப்படு முன் லேடி லின்லித்கோ அவர்கள் கூறியதாவது :—

“போர் முடிந்த பிறகு, ஒவ்வொரு நாட்டையும் சேர்ந்த பெண் மக்கள் அனைவரும், ஏதாவது ஒரு ‘ வாலண்டரி சர்விஸில்’ சேர்ந்து ஒன்றுபட்டுத் தொண்டாற்ற வேண்டியது அவசியமாகவே வந்து முடியும். புதிய உலக அமைப்பிற்குப் பெண் மக்களின் கூட்டுறவு இன்றி யமையாத ஒரு சக்தியாகும்.”

யுத்த நாட் குறிப்புகள்

பிரிட்டனும் ஜெர்மனியும்.

நவம்பர் 18.—‘டுனா யூன்ஸ்’ என்னும் பிரிட்டிஷ் நீர் மூழ்கிக் கப்பல் 3 ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களை மூழ்கடித்தது.

நவம்பர் 20.—லண்டன் ஹாலாவே சிறையிலிருந்து சர் ஆஸ்வால்ட் மாஸ்லியும் அவரது மனைவியாரும் விடுதலையானார்கள்

நவம்பர் 21.—ஐரோப்பிய ஆலோசனைக் கமிஷனில் பிரிட்டிஷ் பிரதிநிதியாக மிஸ்டர் வில்லியம் ஸ்ட்ராங் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் ஸ்தானீகர் பதவி பெற்றிருக்கிறார்.

நவம்பர் 22.—மிஸ்டர் ஆல்ப்ரெட் டப் கூப்பர் ஸ்தானீகர் பதவியோடு, பிரஞ்சு தேசிய மீட்சிக் கமிட்டியில் பிரிட்டிஷ் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இத்தாலி ஆலோசனைக் கமிட்டியில் பிரிட்டிஷ் அங்கத்தினராக மிஸ்டர் ஹரால்ட் மாக்மில்லன் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

நவம்பர் 23.—இந்த வருஷக் கடைசியில், பிரிட்டிஷ் சோல்ஜர்கள் அந்நிய நாடுகளில் 5 வருஷங்களுக்கு மேல் சேவகம் செய்யாதிருக்கத் தக்கபடி ஏற்பாடுகள் செய்யக் கூடு மென்று தாம் நம்புவதாக, காமன்ஸ் சபையில், யுத்த மந்திரி சர் ஜேம்ஸ் க்ரிக், ஒரு கேள்விக்குப் பதிலளித்தார்.

அமெரிக்காவும் அட்லாண்டிக்கும்.

நவம்பர் 18.—அமெரிக்க அரசாங்கக் கூட்டு சபையில் மிஸ்டர் கார்டல் ஹல், மாஸ்கோ மகாநாட்டு நடவடிக்கைகளைக் குறித்து ஒரு அறிக்கையை சமர்ப்பித்தார்.

நவம்பர் 21.—இரண்டாம் போர்முனையின் படைத்தலைவராக ஜெனரல் ஜி மார்ஷல் நியமிக்கப் படலாமென்று சொல்லப்படுகிறது.

நவம்பர் 22.—இத்தாலியில் நேசநாட்டு ஆதிக்கக் கோஷ்டியின் ஆலோசனை சபையின் அங்கத்தினராக மிஸ்டர் ராபர்ட் மர்பி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்தியா, பர்மா, இலங்கை.

நவம்பர் 18.—மத்திய சட்ட சபையில் உணவுப் பிரச்சினை சம்பந்தமான விவாதம் முடிவடைந்தது.

சீனப் படைகள் அமெரிக்கர்களிடம் பயிற்சிபெற்ற பிறகு அக்டோபர் மாதம் 26-ம் தேதி கிளம்பி இதுவரை 20 முதல் 30 மைல் தூரம் முன்னேறி பர்மாவிற்குள் வெகு தூரம் போய்விட்டார்கள்.

நவம்பர் 19.—11 மாகாண கவர்னர்களும் டில்லியிலுள்ள வைசிராய் மாளிகையில் கூடி 5½ மணி நேரம் விவாதித்தார்கள்.

இந்திய அரசாங்க சபையில் உணவுப் பிரச்சினைப்பற்றிய விவாதம் ஆரம்பமானது.

நவம்பர் 20.—இன்று மாகாண கவர்னரவர்கள் மீண்டும் மேன்மை தங்கிய வைசிராய் தலைமையில் கூடி, யுத்தத்திற்குப் பிறகு புனர் நிர்மாண வேலைகள் எப்படி நடைபெற வேண்டுமென்பது பற்றி 5½ மணி நேரம் விவாதித்தனர்.

நவம்பர் 21.—பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளில் சம நிலையில் இந்தியாவும் இருக்கவேண்டுமென்று ஆஸ்திரேலிய அரசாங்கம் விரும்புவதாக, இந்தியாவிலுள்ள ஆஸ்திரேலிய ஹை கமிஷனர் சர் ஐவென் மக்கே குறிப்பிட்டார்.

நவம்பர் 22.—இந்தியாவுக்குப் பூரண விடுதலை கொடுக்கப்பட்டால், அதை இந்நாடு எப்படி ஏற்றுக்கொள்ளும் என்பது பற்றி சர் சாமுவல் ரங்கநாதம் தம் கருத்துக்களைத் தெரிவித்தார்.

ரஷ்யாவும் பின்லந்தும்.

நவம்பர் 18.—கரோஸ்டென், ரெசிட்ஸா ஆகிய இடங்களை சோவியத் படைகள் கைப்பற்றின. ஷிடோமிரைச்சுற்றி கடுமையான டாங்கி யுத்தம் நடைபெறுகிறது.

நவம்பர் 19.—ரஷ்யர்கள் ஒவ்ருச்சைக் கைப்பற்றினார்கள். ஷிடோமிரைக் காலி செய்தனர். மோர்ஜிர் சதுப்பு நிலப் போராட்டம் ஆரம்பமானது.

நவம்பர் 20.—செர்க்காசியின் வடமேற்குப் பகுதிக்குள் சோவியத் படைகள் புகுந்து விட்டன. நவ்ஸிஸ்டுபெங்கி என்னும் ஜில்லா தலைநகரத்தையும், எனோப், புரகோபா ஆகிய இடங்களையும் சோவியத் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

நவம்பர் 22.—க்ரெமென்சுக்-ஸ்னெமென்கா ரயில்வே லைனுக்குக் கிழக்கேயுள்ள ஜெர்மன் பாதுகாப்புகளைத் துளைத்துக் கொண்டு 30 மைல் போர்முனையில் ரஷ்யப் படைகள் 20 மைல் தூரம் முன்னேறிவிட்டன. கொராஷ்டிஷேப் பகுதியில் 3 முக்கியமான மலைக்கோட்டைகளையும் கைப்பற்றின.

நவம்பர் 23.—நெடு நாட்களாக கோமெலில் நடைபெற்றுக் கொண்டிருந்த போர் முடிவடையும் நிலையி லிருக்கிறது. ரெச்சிட்சுக்கு தெற்கே டினீப்பர் ஆற்றின் வலது கரையிலிருந்து ஜெர்மானியர்கள் அடியோடு விரட்டப்பட்டனர்.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதி.

நவம்பர் 20.—சாங்ரோ ஆற்றங்கரையில் 12 மைல் நீளத்திற்கு எட்டாம் படை யிருந்து வருகிறது, பிரானோ என்னு மிடத்தை அது கைப்பற்றியது.

நவம்பர் 21.—இசெர்னியா-வாஸ்டோ ரோடிலுள்ள அக்னோன் என்னும் ஒரு கேந்திர ஸ்தானத்தை நேசப் படைகள் கைப்பற்றின. அன்றியும், காஸ்டெல் சான்வின்சென்சோ, ட்ரோகெட்டா, ஆர்ச்சி ஆகிய இடங்களையும் கைப்பற்றின.

தம்மை எதிர்ப்பவர்களோடு போராடும் பொருட்டு எல்லாத் தேச பக்தர்களையும் மன்னர் விக்டர் இம்மானுவேல் அழைத்திருக்கிறார்.

நவம்பர் 22.—வஸ்டோக்லயாண்டி, சான்பீட்ரோ, ஆகிய மத்தியப் பகுதியிலுள்ள இடங்களை நேசப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

மார்ஷல் படோக்ளியோ அரசாங்கத்தில் கைத் தொழில் இலாக்கா மந்திரியாக நியமிக்கப்பட்ட பேராசிரியர் எபிகார்போ கார்பினோ மறைந்து விட்டார்.

நவம்பர் 23.—மாண்டசூலாவிற்கு வட மேற்கே யுள்ள ஜெர்மன் மிஷின் பீரங்கிகளைக் கூண்டோடு அமெரிக்கப் படைகள் நாசமாக்கின.

சென்ற திங்கட்கிழமை முசோலினி தற்கொலை செய்து கொண்டாரென்று ‘‘டேகன்ஸ் நைடர்’’ என்னும் பத்திரிகையின் சூரிச் நிருபர் கூறுகிறார்.

நேச தேசப் படைகள் சாமாஸ் என்னு மிடத்தைக் காலி செய்வதாகச் செய்தி கிடைக்கிறது.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரிகள் வயப்பட்ட நாடுகள்.

நவம்பர் 17.—பிரஞ்சு அதிகாரிகளால் லெபனான் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்ட எமிலி எட்டியை ஜெனரல் செட்ராஸ் சந்தித்தார்.

நவம்பர் 18.—ஜெனரல் செட்ராஸ், பெய்ரூட்டிலுள்ள பிரிட்டிஷ் மந்திரியான மேஜர் ஜெனரல் ஸ்பியர்ஸைக் கண்டார்.

நவம்பர் 19.—லிபனானுக்குப் பூரண விடுதலை யளிக்க வேண்டுமென்று வற்புறுத்தி அமெரிக்க அரசாங்கம் பிரஞ்சு மீட்சிக் கமிட்டிக்கு ஒரு செய்தி யனுப்பியிருப்பதாக மிஸ்டர் கார்டல் ஹல் தெரிவித்தார்.

நவம்பர் 20.—மார்ஷல் பெட்டெய்ன் ரசஜிநாமாச் செய்து விட்டதாகவும் லவாலிடம் கைதியா யிருப்பதாகவும் ‘ஸ்வென்ஸ்கா டக்ப்ளாடெட்’ என்னும் பத்திரிகையின் பெர்ன் நிருபர் அறிவிக்கிறார். அன்றியும் மார்ஷல் பெட்டெய்ன் இரத்தாசய சம்பந்தமாகக் கடும் நோய்வாய்ப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

நவம்பர் 21.—பிரஞ்சு தேசிய மீட்சிக் கமிட்டியார் விடுத்துள்ள அறிக்கையில், லெபனான் குடியரசுத் தலைவர் பெகாரி எல் கௌரியை விடுவிக்க வேண்டு மென்று ஜெனரல் செட்ராஸ் கூறிய யோசனைப்படி, அவரை மீண்டும் விடுவித்து, தலைமைப் பதவி வழங்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

லெபனானில் பிரஞ்சு டெலிகேட் ஜெனரலாக விருக்கும் ஹெல்லே, உடனே ஆல்ஜியர்சுக்கு வரவேண்டு மென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

எந்த முறையில் மீண்டும் அரசாங்க நிர்வாகம் லெபனானில் நடைபெற வேண்டு மென்பது பற்றி, கௌரியைக் கலந்து கொள்ளும்படி ஜெனரல் சட்ராசுக்கு அனுமதி யளிக்கப்பட்டிருக்கிறது.

நவம்பர் 22.—விடுதலை பெற்ற லெபனான் தலைவர் கௌரியும் மற்ற மந்திரிகளும் பெய்ரூட்டுக்கு வந்து சேர்ந்தனர். பரூக் மன்னரும், பிரதம மந்திரி நஹாஸ் பாட்சாவும் அவர்களுக்குப் பாராட்டுச் செய்திகள் அனுப்பி யிருக்கின்றனர்.

நவம்பர் 23.—மார்ஷல் பெட்டெய்ன் கடும் நோயா யிருப்பதாக வெளிவந்த செய்தி பொய் யென்று மறுக்கப் படுகிறது.

லெபனான் அரசாங்க சபை மீண்டும் அமைக்கப்பட்டு விட்டதாக லெபனானிலுள்ள பிரஞ்சு ஆக்டிங் டெலிகேட் ஜெனரல் வொஸ்செடெக்னோ நேற்றிரவு அறிவித்தார். எமிரி எட்டியை லெபனான் முதல் மந்திரியாக நியமித்த கட்டளை ரத்தானது. இப்படிப்பட்ட நெருக்கடிக்குக் காரணமா யிருந்த லெபனான் பார்லிமெண்டின் தீர்மானமும், ரத்து செய்யப்பட்டது.

லெபனானில் உள்ள நிலைமையைக் குறித்து காமன்ஸ் சபையில் மிஸ்டர் ரிச்சர்ட் லா ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

டாக்டர் பினேஷ் மாஸ்கோவி லிருப்பதாகத் தெரிகிறது.

நடு நிலைமை நாடுகள்.

நவம்பர் 17.—அமெரிக்கப் பார்லிமெண்டில் நெடு நேரம் டிவாலரா சொற்பொழிவாற்றி, நடு நிலைமை வகிப்பதே சரி என்ற கொள்கையை நிலை நாட்டி வெற்றி பெற்றார்.

நவம்பர் 21.—ஐரோப்பிய யுத்தம் சம்பந்தமாக நடு நிலைமை வகிப்பதே தம் கொள்கை என்று அர்ஜென்டைனின் அந்நிய நாட்டுக் கொள்கையை வரையறுத்து அதன் உப தலைவர் சீனர் எடல்பிரோ பாரெல் கூறினார்.

சுவீத்ஸர்லந்து தன் நடு நிலைமையை விட்டு வழுவாது என்று ‘சுவிஸ் பெடரல் கௌன்சிலரான’ எட்வர்ட் வான் ஸ்டீஜி குறிப்பிட்டார்.

தூரக் கிழக்கு நாடுகள்.

நவம்பர் 19.—லூயி மௌண்ட் பாட்டன் பிரபு இன்று உத்தியோக முறைப்படித் தென் கிழக்காசியப் படைத் தலைமையை ஏற்றுக்கொண்டு, முதலாவது உத்தியோக அறிக்கை விடுத்தார். பெரும் போராட்டம் ஆரம்பமாக இன்னும் அதிக நாட்கள் பிடிக்கும் என்று தெரிகிறது.

பொகன்வில்லா தீவிலிருந்து 40,000 பேர்களைக் கொண்ட ஜப்பானியப் படையின் பெரும் பகுதியினர் உதவி பெற முடியாதபடி சிக்கிக் கொண்டனர்.

நவம்பர் 20.—மத்திய சீனப் போர் முனையில், செங்டாவுக்கு வடக்கிலும் வட கிழக்கிலும் ஜப்பானியப் படைகள் முன்னேறின.

இசெவி என்னுமிடத்தில் ஜப்பானியப் படைகள் புகுந்தன.

நவம்பர் 21.—ரபாலுக்கு வடகிழக்கே 10,000 டன் ஜப்பான் கப்பல் ஒன்று தீக்கிரையானது.

நவம்பர் 22.—சட்டல்பெர்க்கில் மிகுந்த பலத்தோடு ஆஸ்திரேலியப் படைகள் ஜப்பானியர்களைத் தாக்குகின்றன.

கீழக் கோடி நாடுகள்.

நவம்பர் 23.—கில்பர்ட் தீவுகளைச் சேர்ந்த அபமனுவில் அமெரிக்கக் கப்பற் படையினர் போய் இறங்கினர். டாராவாவிலும் மகினிலும் தம் நிலைமையை முன்னேற்றிக் கொண்டன.

மத்திய பசிபிக் மகா சமுத்திரத்தில் நடை பெறும் யுத்தத்தைக் குறித்து, அமெரிக்கக் கப்பற் படை மந்திரி கர்னல் நாக்ஸ் ஒரு அறிக்கை விடுத்தார்.

ரூ. 5,000 ரூ. 1,000

பரிசுகள்

எதிரி உளவாளிகள் யார் ?

எதிரிக்கு உதவி செய்கிறவர்கள் யார் ?

பிடித்துக் கொடுத்தால் ரூ. 5,000 வரை பரிசு

அவர்களைக் கைது செய்யத் தக்க தகவல் கொடுப்பவர்களுக்கு

ரூ. 1,000 வரை பரிசளிக்கப்படும்

● 1. சந்தேகத்திற் கிடமான கப்பல் நடமாட்டங்கள்; குறிப்பாக, கடலோரங்களில் நடமாட்டங்கள்,

● 2. அந்நியர்கள் இராணுவ உடுப்புக்களுடனும் ஆயுதங்களுடனும், அல்லது அவையின்றியும், கூட்டமாகவோ, தனித் தனியாகவோ காணப்பட்டால்,

● 3. நேச நாட்டு விமானங்கள் அல்லாதவை தரையிலோ ஆகாயத்திலோ காணப்பட்டால்,

● 4. அவற்றிலிருந்து விமானக் குடைகளின் உதவியால் யாராவது இறங்கினாலும், எதையாவது இறக்கினாலும்,

● 5. தரையிலோ, கடலிலோ, ஆகாயத்திலோ எதிரி நடமாட்டம் பற்றிய குறிப்புக்கள் ஆகிய தகவல்களைக் கொண்டு எதிரிகளின் உளவாளிகள் கைது செய்யப்பட்டால்,

இந்தப் பரிசுகள் கொடுக்கப்படும்

உளவாளிகள் கிடைத்தாலும் அல்லது தகவல் கிடைத்தாலும் கிராமப் பெரியதனக்காரருக்காவது, போலீசாருக்காவது கூடிய சீக்கிரம் தெரிவிக்க வேண்டும்; அல்லது கைது செய்யப் பட்டால், அவர்களிடம் ஒப்புவிக்க வேண்டும்.

பரிசுத் தொகை பெற விரும்புவோர் அது சம்பந்தமான முழு விவரங்களும், சாட்சிகளின் பெயர்கள், விலாசங்கள், வாக்கு மூலங்கள் ஆகியவற்றுடன் ஜில்லா கலெக்டருக்காவது ஜில்லா மாஜிஸ்திரேட்டுக்காவது அனுப்ப வேண்டும்.

இந்தப் பரிசுகள் சாதாரணமாக படை உத்தியோகஸ்தர்களுக்கும், சிவில் இலாக்காக்களிலுள்ள கெஜடெட் உத்தியோகஸ்தர்களுக்கும் கொடுக்கப்பட மாட்டா. ஆனால், சில விசேஷ சந்தர்ப்பங்களில் இந்தியா அரசாங்கத்தின் அனுமதி பெற்று அவர்களுக்கும் வழங்கப்படும்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.